# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 53 — 1973 මාර්තු 30 වැනි සිකුරාදා — 1973.03.30

53 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு மாச்சு மாதம் 30 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II அ)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 311 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 326 |


## பதவிகள்—வெற்றிடம்

*"ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"*

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பது அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்குவிதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச்சம்பளத்தில் இல்லாதவர்களையொழித்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்த வேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அரசசேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றுண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுங்குவோர் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்தே அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள் அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

### முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (IIஅ) விலும் (IIஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

*குறிப்பு.*—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிபபடுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

**5. வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரஜையாகவிருப்பவராகும்.

**6. யுத்தசேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களுக்கும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

**7. பிற தேவைகள்.**—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந்நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோவெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்க வேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இது விடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப்பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.**—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியன சம்பளத்துடன் அடங்கியது.

---

## கல்வி அமைச்சு

### வளர்ந்தோர் கல்வி உத்தியோகத்தர் பதவி

கல்வி அமைச்சிலுள்ள வளர்ந்தோர் கல்வி உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 1973 ஆம் ஆண்டு ஏப்றில் மாதம் 30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் செயலாளருக்கு (பொது நிர்வாகக் கிளைக்கு) பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வளர்ந்தோர் கல்வி உத்தியோகத்தர் பதவி" என அடையாளமிடப்பட வேண்டும்.

*2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்*

இப்பதவி நிரந்தரமானது. தெரிவு செய்யப்படும் அபேட்சகர், உபகாரச் சம்பள உரித்துடைய பதவி ஒன்றினை ஏலவே வகிக்காவிடின், அரசாங்க சேவைச் சேமலாப நிதிக்குக் கட்டணங்கள் செலுத்த வேண்டும். எனினும், அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான பதவி ஒன்றினை நியமனத் திகதியின்போது வகிக்கும் ஓர் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படின் அவர் தொடர்ந்து புதிய பதவியில் உபகாரச் சம்பள உரிமைகளை அனுபவிப்பார். தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர் ஏற்கனவே அரசாங்க சேவையிலில்லாவிடின் அவருடைய நியமனம் முதற்கண், மூன்று வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும். எனினும், அரசாங்க சேவையில் நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை வகிக்கும் ஓர் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படின் அவர் ஒருவருட காலத்துக்கு பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார்.

*3. சம்பள அளவுத்திட்டம்*

இப்பதவிக்குரிய திரட்டிய வருடாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 8,160—8/360—3/480—12,000/- ஆகும். வருடாந்தச் சம்பள ரூ. 9,960 க்கு முன் வினைத்திறமைகாண் தடை ஒன்றுண்டு. (1.10.69 க்கு முன்னரான திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம்—ரூ. 5,520—8/360—2,480—9,360/- ஆக இருந்தது)

*4. தகைமைகள்*

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகள் பெற்றுள்ளாரென திருப்தியான சான்று காட்டவேண்டும் :—

(i) சிறந்த நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவராக இருக்க வேண்டும்.

(ii) 1973 ஆம் ஆண்டு ஏப்றில் மாதம் 30 ஆந் திகதியன்று 30 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்கவேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக்கட்டுப்பாடு அமையாது).

(iii) பின்வரும் தகைமைகளுள் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும் :—

(அ) வளர்ந்தோர் கல்வியிலான பாடங்களுடன் அல்லது வளர்ந்தோர் கல்வித் துறையுடன் தொடர்புபட்ட பாடங்களுடன், அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகப் பட்டதாரியாக இருப்பதுடன், அவர் கடமையாற்ற வேண்டிய மொழியில், க. பொ. த. (சா. தர) பத்திர அல்லது உயர்ந்த பரீட்சையில் மொழியில் அல்லது இலக்கியத்தில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

(ஆ) வட்டாரக் கல்வி உத்தியோகத்தராக அல்லது வளர்ந்தோர் கல்வி மாவட்ட அமைப்பாளர்ாக 7 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(இ) ஆசிரியராக அல்லது வட்டாரக் கல்வி உத்தியோகத்தராக அல்லது வளர்ந்தோர் கல்வி மாவட்ட அமைப்பாளராக 10 வருட சேவை பூர்த்தி செய்திருக்க வேண்டும் (இதில் குறைந்த பட்சம் 5 வருட சேவை பட்டதாரி ஆசிரியராக அல்லது உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரியராக இருக்க வேண்டும்).

(iv) வளர்ந்தோர் கல்வி தொடர்பான வேலையில் குறைந்தபட்சம் 3 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

*குறிப்பு.*—நியமன நிபந்தனைகளில் விதிக்கப்பட்டுள்ள வினைத்திறமைகாண் பரீட்சைகளுள் ஒன்றில் அல்லது கூடியவற்றில் சித்தியடைந்துள்ள வட்டாரக் கல்வி உத்தியோகத்தர்களுக்கும் வளர்ந்தோர் கல்வி மாவட்ட அமைப்பாளர்களுக்கும் அவர்கள் கல்வி நிலையம் ஒன்றின் அதிபராக அல்லது வளர்ந்தார் கல்வியில் அல்லது வளர்ந்தோர் கல்வி சம்பந்தமான பரிசோதனைகளில் அல்லது இவ்விரண்டிலும் பாந்த அனுபவம் பெற்றிருப்பின், முதன்மை அளிக்கப்படும்.

5. அபேட்சகர்கள், வேண்டப்படும் நேரத்தில், பின்வரும் சாதனங்களுள் எதையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் ஒழுங்கு விதிகளின் நோக்கத்தின் பொருட்டு வழங்கப்படும் பிறப்புச் சாட்சிப் பத்திரம் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது).

(ஆ) பட்டத் தாராதரப் பத்திரம் அல்லது ஆகக்கூடிய கல்வித் தாராதரப் பத்திரம்.

(இ) குணச்சான்றிதழ்கள் இரண்டு (இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்)

(ஈ) உயர்தொழில் தகைமையும் தொழில்நுட்பத் தகைமையும்/உயர் தொழில் தகைமை அல்லது தொழில்நுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(i) சாதனங்களேனும் சாதனங்களின் பிரதிகளேனும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படலாகாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும். பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள தகுதியுடைய அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் தத்தம் திணைக்களத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்குப் பின் பெற்றுக்கொள்ளப்படும் எவ் விண்ணப்பமும் அத்தகைய விண்ணப்பம் உரிய திகதிக்குமுன் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரால் பெற்றுக்கொள்ளப்பட்டு தாமதத்துக்கான போதிய காரணங்காட்டி அதனை ஏற்றுக் கொள்ளுமாறு அவர் சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான கடிதங்களும் கல்வி அமைச்சின் செயலாளரின் உத்தியோக விலாசத்துக்கே அனுப்பப்பட வேண்டும். எக்காரணத்தையிட்டும் அவை அமைச்சிலுள்ள எவ்வுத்தியோகத்தரின் சொந்த விலாசத்துக்கும் அனுப்பப்படலாகா.

8. அரசாங்க சேவையில் உள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையும் இவ்வர்த்தமானியின் I ஆம் பகுதி, II ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளனவையுமான பொது நிபந்தனைகளுக்குக் கவனம் கோரப்படுகிறது.

9. விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படும்.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1973, மார்ச் 20.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

($8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$ அளவுத்தாளில் விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும்)

**கல்வி அமைச்சிலுள்ள வளர்ந்தோர் கல்வி உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்**

1. பெயர் (முதலெழுத்துக்களுடன்) திரு/திருமதி/செல்வி :—
2. முழுப்பெயர் :————.
3. உத்தியோக விலாசம் :————.
4. சொந்த விலாசம் :————.
5. (அ) இலங்கையரா ? :————.
   (ஆ) அங்ஙனமாயின் வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா ? :————.
6. பிறந்த திகதி : வருடம்————, மாதம்————, நாள்————.
7. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்றுள்ளபடி வயது :—
   வருடம்————, மாதம்————, நாள்————.
8. தற்போதைய உத்தியோகம் பற்றி விபரங்கள் :—.
   (அ) பதவி :————.
   (ஆ) நிரந்தரமானதா தற்காலிகமானதா ? :————.
   (இ) உபகாரச் சம்பள உரித்துடையதா அற்றதா ? :————.
   (ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீரா ? :————.
   (உ) திணைக்களம் :————.
   (ஊ) நிலையம்/வேலை ஸ்தலம் :————.
   (எ) வருடாந்த திரட்டிய சம்பள அளவுத் திட்டம் :————.
   (ஏ) தற்போதய வருடாந்த திரட்டிய சம்பளம் :————.
9. கல்வித் தகைமைகள் :————. (சிங்களம்/தமிழ் மொழியில் பெற்றுள்ள தேர்ச்சியும் தாராதரப் பத்திரங்களும்)

| பரீட்சை | வருடம் | பாடங்கள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

10. உயர்தொழில் தகைமைகள் பற்றிய விபரங்கள் :—

| தாராதரப் பத்திரம் வழங்கியவர் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

11. பொதுக் கல்வி கற்ற நிலையங்கள் :—

| நிலையம் | வகுப்பு | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |
| 8. | | | |

12. வகித்த முன்னைய பதவிகள் (காலக்கிரமப்படி, காலங்களை சரியான திகதிகளுடன் குறிப்பிடவும்) :————.

| திணைக்களம் | நிலையம்/வேலை ஸ்தலம் | பதவி | நிரந்தரமானதா தற்காலிகமானதா | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|---|

13. நீதிமன்றம் எதிலேனும் உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? :————.
    (அங்ஙனமாயின் விபரங்களைக் கொடுக்கவும்)
14. அரசாங்க சேவையில் யாதேனும் பதவியிலிருந்து நீர் விலக்கப்பட்டீரா ? :————.
    (அங்ஙனமாயின் விபரங்களைக் கொடுக்கவும்)

மேலே இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். மேலும், இங்கு நான் கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவை எனக் காணப்படின் நியமனத்துக்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடுமின்றி சேவையிலிருந்து விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் எனவும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

3-1190—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

இல. சுபோ/ஆய/2/6

### சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களம்

**இயற்கைப் பட்டுத்தொழில் உதவியாளர் பதவிகள்—இயற்கைப் பட்டுத்தொழில் செயற் திட்டம்**

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களத்தில் இயற்கைப் பட்டுத் தொழில் உதவியாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதன்கீழ் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு அதிபதி, சிறு ஏற்றுமதிப்பயிர்கள் திணைக்களம், 159, தர்மபால மாவத்தை, த. பெ. இலக்கம் 1524, கொழும்பு 7 என்னும் முகவரிக்கு 1973 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ந் திகதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக பதிவுஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் இவ்வலுவலகத்தால் வழங்கப்படமாட்டா. விண்ணப்பம் அனுப்பும் தபால் உறையின் மேல் இடதுபக்கத்தில் " இயற்கைப்பட்டுத் தொழில் உதவியாளர் பதவி " எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பளமற்றவையுமாகும். உதவுதொகைகள் அரசாங்க சேவைச் சகாய நிதிக்குச் செலுத்தப்படல் வேண்டும். இந்நியமனங்கள், முதலில், மூன்றாண்டு காலத் தகுதிகாண் நிலையிலிருக்கும்.

(ii) நியமனம் பெறுவோர் இத்திணைக்களத்தின் வெளிக்கரும அலுவலராகுவாராகையால் பொது விடுமுறை, நோன்மதி நாட்களை ஓய்வு நாட்களாக எடுத்துக்கொள்ளத் தக்கராகார். எனினும் அவர்கள் நிலையத்தில் இல்லாதிருக்கும் போது வேலையைச் செவ்வனே நிறைவேற்றத்தக்க ஒழுங்குகள் செய்யப்படுமிடத்து எந்நாளினையும் எந்நேரத்தையும் ஓய்வுக்காக எடுத்துக் கொள்ளலாம்.

(iii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் நியமனம் மூன்று ஆண்டுகளுள் சிங்கள மொழித் தேர்ச்சிபெற்று சிங்கள மொழித் தேர்ச்சிப் பரீட்சைகளில் சித்தியடைதலும் வேண்டும். முதலாம் ஆண்டிலே தமிழ் மொழியில் வேலை செய்யும் அறிவும் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

3. சம்பளமும் படிகளும்.—இப்பதவிகளுக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

திரட்டிய சம்பளம்—ஆண்டொன்றுக்கு ரூபா 3,864—19×144—4×180—ரூபா 7,320. (ஆண்டொன்றுக்கு ரூபா 4,534 லும் ஆண்டொன்றுக்கு ரூபா 6,024 லும் வினைத்திறமைக் காண் தடைகளுள).

4. தேவையான தகைமைகள்.—விண்ணப்பதாரர்,

(அ) (1) எண்கணிதம் அல்லது கணிதம், சிங்களம் அல்லது தமிழ் மொழியுட்பட, வேறு நான்கு பாடங்களுடன் பெற்ற சிரேட்ட பாடசாலைத் தராதரப்பத்திரம், அல்லது கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (சாதாரணம்) பெற்றிருத்தல் வேண்டும். இவற்றில் ஐந்து பாடங்கள் ஒரே தடவையில் ஒரு பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

(2) (i) தகுதி வாய்ந்த நிறுவனத்திலிருந்து இயற்கைப் பட்டுத்தொழில் சான்றிதழ் பெற்றவராகவும் ;

அல்லது

(ii) கமத்தொழில் கல்லூரியில் சிரேட்ட சான்றிதழ் பெற்றவராகவும் ;

அல்லது

(iii) இயற்கைப் பட்டுத்தொழிலில் குறைந்தது 5 வருட அனுபவம் உடையவராகவும் ;

அல்லது

(iv) சமமான அல்லது உயர்ந்த தகைமை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்கும் கடைசித் திகதியன்று 22 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பகாரருக்கு இவ்வயதெல்லைகள் ஏற்புடைத்தாகா).

(இ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருத்தல் வேண்டும்.

குறிப்பு.—இயற்கைப்பட்டுத் தொழிலில் போதிய அனுபவம் உடைய விண்ணப்பதாரர்களுக்கு கல்வித்தகைமைகள் அகற்றப்பட இடமுண்டு.

5. விண்ணப்பகாரர் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலப்பிரதிகள் அல்ல) தமது விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(அ) பிறப்புப்பதிவுச் சான்றிதழ் (மு. கு.—ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பு நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது).

(ஆ) மிக உயர்ந்த கல்விச் சான்றிதளும் உயர் தொழிற்கல்விச் சான்றிதளும் அல்லது உயர் தொழிற்றகைமைச் சான்றிதழ்.

(இ) சிங்கள மொழியிற் சித்தியெய்திய உயர் பரீட்சைச் சான்றிதழ்.

(ஈ) சமீப காலத்திற் பெற்ற குணச் சான்றிதழ்கள் இரண்டு (அரசாங்க சேவையிலிருந்து கொண்டு விண்ணப்பிப்போர் விடயத்தில் குணச்சான்றிதழ்கள் அணைக்கப்பட வேண்டியதில்லை).

குறிப்பு.—மேலே கேட்கப்படும் சான்றிதழ்களினதோ நற்சாட்சிப் பத்திரங்களினதோ பிரதிகள் திருப்பி அனுப்பப்பட மாட்டா.

6. அரசாங்க சேவையிலிருக்கும் விண்ணப்பகாரர் உரிய திணைக்களத் தலைவருக்கூடாகவே அவர் தம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பட்ட கால எல்லைக்குப் பிந்தி இக்காரியாலயத்துக்கு வந்து சேரும் விண்ணப்பங்கள் விதிக்கப்பட்ட காலத்துக்குள் உரிய திணைக்களத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவற்றைப் பிந்தி அனுப்புவதற்குரிய காரணங்களைக் காட்டி ஏற்றுக்கொள்ளுமாறு விதந்துரைக்கப்படாவிடின் ஏற்றுக்கொள்ளப்படா.

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான வேறெந்தக் கடிதத் தொடர்புகளும் அதிபதி, சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களம், 159, தர்மபால மாவத்தை, த. பெ. இல. 1524, கொழும்பு 7 என்னும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டுமேயொழிய இத்திணைக்களத்திலுள்ள எந்த அலுவலரதும் சொந்தப் பெயரிட்டு அனுப்பப்படல் ஆகாது.

8. இந்த வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I தொகுதி II இன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பகுதி நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளும் இவ் விளம்பரத்துக்கும் பொருந்தும்.

9. விண்ணப்பங்கள் கிடைத்தமை அறிவிக்கப்படமாட்டாது.

கலாநிதி ஈ. ஜயனெத்தி,
அதிபதி, சிறு ஏற்றுமதிபயிர்கள் திணைக்களம்.

சிறு ஏற்றுமதிப்பயிர்கள் திணைக்களம்,
159, தர்மபால மாவத்தை,
த. பெ. இல. 1524,
கொழும்பு 7,
21 மார்சு, 1973.

விண்ணப்ப மாதிரிப் படிவம்

1. முழுப் பெயர் :————.
(அ) முதற் பெயர் :————.
(ஆ) பிற பெயர்கள் :————.
2. விலாசம் :————.
3. பிறப்புத் தேதியும் 30.4.1973 ல் சரியான வயதும் :————.
(பிறப்புப் பதிவுச் சான்றிதழ் பிரிதி அணைக்குக).
4. நாட்டினமும் பெறப்பட்ட விதமும் :————.
5. பிறப்பிடம் :—
(அ) விண்ணப்பகாரர் :————.
(ஆ) தந்தை :————.
(இ) தந்தை வழிப்பாட்டன் :————.
(ஈ) தந்தை வழிப்பூட்டன் :————.
6. திருமணமானவரா ? தனியானவரா ? :————.
7. கல்வி/தொழிற்றகைமைகள் :————.
(பிரதிகள் அணைக்குக).
8. சிங்கள மொழித் தேர்ச்சி :————.
(சான்றிதழ் அணைக்குக).
9. அரசாங்க சேவை முன்னர் உண்டா ? உண்டானல், எப்பதவி ? விலகுவதற்குரிய காரணம் யாது ? :————.
10. சிறப்புத்தகைமைகள், அனுபவம், கோரிக்கைகள் :————.
11. குணச்சான்றிதழ்கள் வழங்கியவர்களின் பெயரும், பதவியும் :————.
(குணச்சான்றிதழ்களின் பிரதிகள் அணைக்குக).
12. பிற விபரங்கள் :————.

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் உண்மையானவை, என்றும் சரியானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதனுள் அடங்கியுள்ள விபரங்கள் பொய்யானவை அல்லது பிழையானவையெனத் தெரிவு செய்யப்படு முன்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து தகைமை நீக்கம் செய்யப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து நட்ட ஈடு எதுவுமின்றி பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என்பதனை நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

2–1203—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

தகவற் பகுதியின் அரசாங்க பிரசாரநிலைய

அத்தியட்சகர் பதவி

தகவற் பகுதியின் அரசாங்க பிரசார நிலைய அத்தியட்சகர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் பத்திரத்தினைப் போல் தயார் செய்யப்பட்டு, பதில் செயலாளர், தகவல் ஒலிபரப்பு அமைச்சு, சேர் பாரன் ஜயதிலக்க மாவத்தை, கொழும்பு 1 என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் பின்வரும் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும் :

2. விண்ணப்பம் அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் " அத்தியட்சகர் " என்று தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் 1973 ஏப்பிரில் 30 ம் திகதி.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் 1973 மே 07 ம் திகதி.

குறிப்பு.—(i) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய விண்ணப்பப் படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக்கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு கடைசித் திகதிவரை பொறுத்திருக்கும் அபேட்சகர் அதனாலாகும் இடருக்கு தாமே பொறுப்பாவர்.

(ii) வெளிநாட்டிலுள்ள விண்ணப்பதாரர்கள் விரும்பினால் தமது விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டிற்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, தகவல் ஒலிபரப்பு அமைச்சின் பதில் செயலாளருக்கு அனுப்பிவைக்கும் பொருட்டு அனுப்பலாம்.

(iii) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கைக் குடியரசின் கீழ் வெளிநாடுகளில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுவாரெனின் அவர்கள் சேவைக்குத் தகுதியான உடல்நலமுடையவர்களாயிருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவ சோதனைக்காகிய கட்டணத்தையும், இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே செலுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானது. தெரிவு செய்யப்படும் அபேட்சகர் முதலில் மூன்று வருடங்களுக்கு தகுதிகாண் அடிப்படையில் பணிபுரிவதோடு அரசாங்க சேவை சேமலாப நிதிக்கு உதவுதொகை வழங்கவும் வேண்டும்.

குறிப்பு.—(i) 31.12.71 ம் தேதி அரசாங்கத்தில் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடைய ஒரு பதவியை வகித்த ஒருவர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டால் அன்னார் இப்பதவியிலும் இளைப்பாற்றுச் சம்பளத்திற்கு தொடர்ந்து உரிமையுடையவராயிருப்பர்.

(ii) நிரந்தரமான, இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் ஒரு அரசாங்க உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டால், அன்னார் முதலில் ஒரு குறிக்கப்பட்ட காலத்திற்கு பதில் சேவை அடிப்படையில் கடமையாற்றும் பொருட்டு நியமிக்கப்படுவார்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள விகிதம் வருமாறு :—வருடமொன்றுக்கு ரூ. 6,720—12 × 360—ரூ. 11,040.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவரென்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) சிறந்த நற்குணமுடையவராகவும், உடனலமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 1973 ஏப்ரல் 30 ஆம் திகதி 22 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரியாகவும், நிர்வாகக் கணக்குவைப்பு, களஞ்சிய அலுவல்கள், நூலகப் பொறுப்பாளர் பதவியில் நூலக நிர்வாகம், இவற்றில் குறைந்தது மூன்று வருட காலசேவை அனுபவமுடையவராகவும் சிங்கள மொழியில் சிறந்த அறிவுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஈ) வயது, கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்யாதவிடத்தும், நிர்வாகக் கணக்கு வைப்பிலும் களஞ்சிய அலுவல்களிலும் நூலக நிர்வாகத்திலும் குறைந்தது 5 வருட சேவை அனுபவத்துடன் சிங்கள மொழியில் சிறந்த அறிவையும் கொண்டிருக்கும் பட்சத்தில், பின்வருவோரிடமிருந்தும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்:—

(i) முதலாம் தரத்தில் அல்லது அதற்கும் உயர்வான தரத்தில் பொது எழுதுவினைஞர் சேவையில் அல்லது அதற்குச் சமமான சேவையிலிருப்போர்;

(ii) அரசாங்க பிரசுர நிலையத்தில் உதவி அத்தியட்சகர் பதவி வகிப்பவர்.

குறிப்பு.—தமிழிலும் ஆங்கிலத்திலும் செயலாற்றும் திறன் ஒரு மேலதிக தகைமையாகும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும்போது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். முக்கிய குறிப்பு.—சமய தீட்சைச் சான்றிதழ்கள் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்;

(இ) குணச் சான்றிதழ்கள் இரண்டு; இவற்றுள் ஒன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர், அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்;

(ஈ) தொழிற் தகைமைச் சான்றிதழ்கள்;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்கள்.

குறிப்பு.—(i) சான்றிதழ்களையாயினும், சான்றிதழ்களின் பிரதிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(ii) சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கும்படி வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ளவர்களினது விண்ணப்பங்களும் கூட்டுத்தாபனங்களிலுள்ளவர்களினது விண்ணப்பங்களும் அவர்களது திணைக்களங்களின் அல்லது கூட்டுத்தாபனங்களின் தலைவர்களுக்கூடாக அனுப்பப்படல் வேண்டும். எனினும் அவர்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பிய திகதியை தகவல் ஒலிபரப்பு அமைச்சின் பதில் செயலாளருக்கு விண்ணப்பங்களின் முடிவு திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக நேராக அறிவித்தல் வேண்டும்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் பதில் செயலாளர், தகவல் ஒலிபரப்பு அமைச்சு என முகவரியிட்டு அனுப்ப வேண்டுமேயன்றி இவ்வமைச்சிலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் தனிப்பட்ட முகவரிக்கு அனுப்புதலாகாது.

8. இந்த வர்த்தமானியில் பகுதி I, தொகுதி (IIஅ) ல் பிரசுரிக்கப்பட்டுள்ள, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காகிய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

9. விண்ணப்பங்கள் கிடைக்கப்பட்டமை அறிவிக்கப்படும். விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் கிடைக்கப்பட்டமைபற்றிய அறிவித்தலைப் பெறாவிடின் அவர்கள் உடனடியாக அதனை தகவல் ஒலிபரப்பு அமைச்சின் பதில் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறுவோர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமையை இழக்க நேரிடும்.

என். பீ. விஜேரத்ன,
பதில் செயலாளர்,
தகவல் ஒலிபரப்பு அமைச்சு.

தகவல் ஒலிபரப்பு அமைச்சு அலுவலகம்,
7, சேர் பாரன் ஜயதிலக்க மாவத்தை,
கொழும்பு, 1973 மார்ச்சு 20.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

### தகவற் பகுதியின் அரசாங்க பிரசுரநிலைய அத்தியட்சகர் பதவி

1. முழுப் பெயர் (தெளிவான எழுத்துக்களில்) :————.

2. அஞ்சல் முகவரி :————.

3. பிறந்த தேதி :————.

4. விண்ணப்ப முடிவு தேதியன்று சரியான வயது :————.
வருடங்கள் :————. மாதங்கள் :————. நாட்கள் :————.

5. நீர் இலங்கைப் பிரசையா ; அவ்வாறெனின், வம்சாவழி காரணமாகவா, பதிவு காரணமாகவா இலங்கைப் பிரசை எனக் குறிப்பிடுக :————.

6. பின்வருவோர் பிறந்த இடங்கள் :—
(அ) விண்ணப்பதாரர் :————.
(ஆ) தந்தை :————.
(இ) தந்தைவழிப் பாட்டன் :————.
(ஈ) தந்தை வழிப் பூட்டன் :————.

7. (அ) பால் :————.
(ஆ) விவாகமானவரா, தனியாளா, கைம்பெண்ணா, தாரமிழந்தவரா : ?————.

8. பின்வருவனவற்றில் சித்தியெய்திய அதி உயர்ந்த பரீட்சை :—
(1) சிங்களம் :————. (2) தமிழ் :————. (3) ஆங்கிலம் :————,

9. 12 வயதிலிருந்து நீர் கல்வி பெற்ற பாடசாலைகள், கல்லூரிகள், ஏனைய நிறுவனங்கள் :—

| பொதுக் கல்வி | தொழிற் கல்வி |
|---|---|
| (1) ———. | (1) ———. |
| (2) ———. | (2) ———. |
| (3) ———. | (3) ———. |
| (4) ———. | (4) ———. |
| (5) ———. | (5) ———. |

10. விளையாட்டுத் துறையில் பெற்ற திறமைகள், அத்துறையில் நீர் வகித்த பொறுப்புவாய்ந்த பதவிகள் என்பனபற்றிய விபரங்கள் :———.

11. (அ) நீர் கடன் தொல்லைகளிலிருந்து விடுபட்டுள்ளீரா ? அல்லாதுவிடின் கடன்களின் தொகை என்ன :———.

(ஆ) எப்போதாவது நீதிமன்றத்தில் குற்றவியல் சட்டத்தின் கீழ் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா ? அவ்வாறெனின், தேதிகள் நீதிமன்ற வழக்குஇல. என்பவற்றையும் குறிப்பிட்டு முழு விபரங்கள் தருக :———.

12. கல்விசார், தொழில்சார் தொழில் நுட்பத் தகைமைகள் :——(பெற்றுக்கொள்ளப்பட்ட சகல பட்டங்கள், விசேடத் துவங்கள், தொழில்சார் தொழில் நுட்பத்தகைமைகள் என்பவற்றின் விபரங்களையும், நிறுவனங்களின் பெயர்களையும் தருக.)

13. தற்போதைய தொழிலும் முன்னைய நியமனங்களும் (ஏதாவது இருப்பின்) (அப்பதவிகளில் சேர்ந்த தேதிகளும், விலகிய தேதிகளும், இறுதியாகப் பெற்ற வருடாந்தச் சம்பளமும் குறிப்பிடப்பட வேண்டும்.)

| பதவி | தொடக்கம் | வரை | வருடாந்த சம்பளம் ரூபா |
|---|---|---|---|
| ——— | ——— | ——— | ——— |

முக்கிய குறிப்பு.—அரசாங்க சேவையிலிருந்து விலகியிருப்பின், அதற்கான காரணம் 15 ஆம் பந்தியின் கீழ் காட்டப்பட வேண்டும்.

14. விசேட தகைமைகள் : அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட/தகைமைகள்/அனுபவம் உள்ளனவா ? அவ்வாறெனில், அவற்றின் விபரங்களைத் தருக :———.

15. ஏனைய விபரங்கள் :———.

16. இந்த ' விண்ணப்பத்தில் அளிக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும் செம்மையானவை எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். மேலும், இங்கு கொடுக்கப்பட்ட விபரங்கள் உண்மையற்றவை அல்லது செம்மையற்றவை என, தேர்விற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எனது விண்ணப்பத் தகைமை அற்று விடுமெனவும். தேர்விற்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் இழப்புப்பணம் கொடுப்பனவு எதுவுமின்றி பதவியிலிருந்து விலக்கப்படுவேன் எனவும் நான் அறிந்திருக்கிறேன்.

———,
விண்ணப்பதாரரின் ஒப்பம்.

தேதி :———.

அபேட்சகர் அரசாங்க சேவையில் உள்ளவரெனின் திணைக்களத் தலைவரின் அறிக்கை :———.

3-1214—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

## அம்பாறை மாவட்டத்தில் கரைவாகு நிந்தவூர் பற்றுப் பிரிவுக்கு கல்முனைக் குடிப்பகுதியில் காரியாலயம் அமைக்கும் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி

கரைவாகு நிந்தவூர் பற்றுப்பிரிவு முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்கு கல்முனைக் குடிப்பகுதிக்குள் நிரந்தரமாகக் குடியிருக்கும் விவாகமான ஆண் முஸ்லிம்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றன.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும் குறிப்பிட்ட பகுதியை உள்ளடக்கும் காரியாதிகாரியின் அலுவலகத்திலும், கிராமசேவையாளர் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களிலும், கிராம நீதி மன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிசு நிலையம், சனசமூக நிலையங்களிலும், ஏனைய பகிரங்க நிலையங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிற அறிவித்தல்களில் அடங்கி உள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்பப்படுவதோடு 1973 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 30 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

சோமகிரி முனசிங்க,
மேலதிக மாவட்ட பதிவாளர்,
மாவட்ட பதிவாளருக்காக.

மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
அம்பாறை 73.3.16.

3-1084—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

## தேசிய பாற்சபை

### நிதி முகாமையாளர் பதவி

சபையின் சேவையிலுள்ள நிதி முகாமையாளர் பதவிக்கு ஸ்ரீ லங்காவின் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரிப் படிவத்திலேயே நிரப்பப்பட்டுக் கீழ்க் கையொப்பமிட்டவருக்கு 1973.4.21 அன்றோ . அதற்கு முன்போ கிடைக்கும்படியாக அனுப்பப்பட வேண்டும்.

2. சம்பளத் திட்டம்

ரூபா 1,500—10×50—ரூபா 1,500 மாதாந்தம் (எல்லாம் உட்பட)

(நல்ல அனுபவமும் உயர் தகைமைகளுமுடைய அபேட்சகரின் தகைமைகளிலும் அனுபவத்திலும் தங்கியதாக அவர் உயர் சம்பளத் திட்டத்திலும் நியமிக்கப்படுவார்—அதாவது ரூபா 1,750—10×50 ரூபா 2,250 மாதாந்தம் (எல்லாம் உட்பட).

3. தகைமைகள்

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தான் பின்வரும் தகுதிகள் உடையவரென அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

(அ) 1973.4.21 அன்று 25 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும்.

(ஆ) நல்லொழுக்கமும் திடகாத்திரமும் உடையவர்.

(இ) பட்டயம் பெற்ற கணக்காளர், அல்லது செலவு முகாமைக் கணக்காளர்கள் சங்கத்தின் அங்கத்தவர், அதற்கு மேற்பட்ட தகைமையும் அனுபவமுமுள்ளவர்.

அல்லது

பட்டயம் பெற்ற கணக்காளர் நிலையத்தின் அல்லது செலவு முகாமைக் கணக்காளர்கள் சங்கத்தின் கடைசிப் பரீட்சையில் சித்தியெய்தியவராகவும், குறைந்தது 10 வருட அனுபவம் கணக்கு முறையில் உடையவராகவும் அதில் இடைத்தரப் பரீட்சையில் சித்தியெய்தியபின் 6 வருடம் நிர்வாகத் திறனில் அனுபவம்.

4. சேவை நிபந்தனைகள்

(அ) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டவிடத்து இப்பதவியில் நியமனம் பெறுவதற்கு முன் அவர் அரசாங்கத்தில் வகிக்கும் நிலையான பதவியைத் துறத்தல் வேண்டும். அப்படியாக அரசாங்க அதிகாரத்துடன் பதவியைத் துறக்குமிடத்துச் சபையின் சேவையிற் சேரும் தருணத்தில் உபகாரச் சம்பளச் சுற்றறிக்கையின் 48அ பிரிவிலுள்ளபடி உபகாரச் சம்பள நன்மைகள் யாவற்றையும் தொடர்ந்து வைத்திருப்பார். திணைக்கள, கூட்டுத்தாபன உத்தியோகத்தரது விண்ணப்பங்கள் யாவும் 1965 ஒகத்து 20 ம் திகதி வெளிவந்த 666 ம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கைக்கிணங்கவே கவனிக்கப்படும். திணைக்கள அல்லது கூட்டுத்தாபனத் தலைவர்கள் மேற்குறிப்பிட்ட திறைசேரிச் சுற்றறிக்கைக்கு இணங்க உத்தியோகத்தர்களை விடுவிக்க முடியுமா என்பதைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

(ஆ) அபேட்சகர் அரசாங்க சேவையில் முன்னரே உறுதிப் படுத்தப்பட்டிருந்தாலன்றி நியமனங்கள் யாவும் நிய மித்த திகதியிலிருந்து மூன்று ஆண்டுகட்குத் தேர்வாய்வு முறையில் அமையும்.

(இ) விண்ணப்பதாரர்கள் 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரச கரும மொழிச் சட்ட ஏற்பாடுகளின் விதிகளுக்கு இணங்க வும், தற்போதிருக்கும் அல்லது இனிமேல் உருவாக்கப் படும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கவும் அர சாங்க மொழிக் கொள்கைக்கு அமைந்து நடக்கும்படி வேண்டப்படுவர்.

(ஈ) தேர்வாய்வுக்குரிய கால எல்லை முடிந்தபின் உறுதிப்படுத்து வது பிறவற்றுள் அரசகரும மொழித் தேவைகளுக்கு இணங்குவதைப் பொறுத்திருக்கும்.

5. பொறுப்பு

இது ஒரு சிரேஷ்ட முகாமைப் பதவி, ஆகவே தேர்ந்தெடுக்கப் பட்டவர் சபையின் நிதிக்கடமைகட்குப் பொறுப்புடையவராகக் கடமையேற்கும்படி வேண்டப்படுவர்.

6. ஒப்பந்த நிபந்தனைகள்

இப்பதவி நிரந்தரமானது. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் சகாயநிதி நன்மைகட்குத் தகுதியுடையவர்.

7. பிணை

தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் பிணைகட்டுமாறு வேண்டப்படு வர்.

8. மருத்துவ சோதனை

சபையின் மருத்துவ அலுவலரால் நடத்தப்படும் மருத்துவ சோதனையில், நியமனம் பெறுபவர் சித்தியெய்துதல் வேண்டும்.

9. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களுடன் கீழ்க்குறிப் பிட்ட சான்றிதழ்களின் பிரதிகளை (மூலங்கள் அல்ல) இணைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (பி.கு.—சமயதீட்சைச் சான்றி தழ் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்காகிய பிர மாணத்தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றி தழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) மிகக்கூடிய கல்வித் தகைமை உயர் தொழிலுக்குரிய தகைமைச் சான்றிதழ்கள்.

(இ) குணவியல்புச் சான்றிதழ்கள் இரண்டு, இவற்றுள் ஒன்று கல்விப் பணிப்பாளர், கல்லூரிப் போதனாசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) முன்னர் வேலை வழங்கியவர்களிடமிருந்து அங்கு செய்த கடமைகளின் தன்மையைக் காட்டும் சான்றிதழ்.

10. விண்ணப்பங்கள் அல்லது அவை சம்பந்தமான கடிதத் தொடர்புகள் யாவும் தலைவர், பாற் சபை, த. பெ. எண். 1155. கொழும்பு-5 என்ற விலாசத்திற்கன்றிச் சபையின் சேவையிலுள்ள எந்த உத்தியோகத்தருக்கோ தனிப்பட்ட முறையில் அனுப்பக் கூடாது.

தலைவர்,
பாற் சபை.

பாற்சபைத் தலைமைக் காரியாலயம்,
த. பெ. எண். 1155,
கொழும்பு-5,
15 மார்ச்சு 1973.

விண்ணப்பப் படிவம்

நிதி முகாமையாளர் பதவி

1. முழுப் பெயர் :———.

2. தனிப்பட்ட முகவரி :———.

3. விண்ணப்பதாரரின் பிறந்த திகதியும் இடமும் :———.
(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

4. விண்ணப்பதாரரின் தந்தையின் பிறப்பிடம் :———.

5. உயர் கல்வித் தகைமைகள் :———.
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்).

6. உயர் தொழிலுக்குரிய தகைமைகள் :———.
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்).

7. சிங்களம்/தமிழ் ஆகியவற்றில் அறிவு :———.

8. முன் அனுபவ விபரங்கள் .
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்).

| வேலைசெய்த நிறுவனத்தின்பெயர் | பதவி | சேவைக்காலம் தொடக்கம் முடிவு |
|---|---|---|
| .................. | .......... | .................. |

9. தற்போதைய உத்தியோக விபரங்கள் :

| வேலைசெய்த நிறுவனத்தின்பெயர் | பதவி | சேவைக்காலம் தொடக்கம் முடிவு |
|---|---|---|
| .................. | .......... | .................. |

10. விண்ணப்பதாரரின் குணம் பற்றிச் சான்று பகரக் கூடிய இருவரின் பெயர்கள்.———

———,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி.———.

3-1212—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

பொ. நி. 20/165

## கல்வி அமைச்சு

### ஓவசியர், II ஆந் தர பதவிகள்

கல்வி அமைச்சிலுள்ள ஓவசியர், II ஆந் தர் பதவிகளுக்கு விண் ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, செயலாளர் (பொது நிர்வாகக் கிளை), கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 என்ற விலாசத்துக்கு 1973 ஆம் ஆண்டு ஏப்றில் மாதம் 21 ஆந் திகதி யன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப் பட வேண்டும். ஏற்கனவே வேலையில் அமர்ந்துள்ள விண்ணப்ப தாரிகள் தமது விண்ணப்பங்களைத் தத்தம் நிலைய/திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்ப வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுதற்கான கடைசித் திகதியின் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுமென்பதைக் குறிப்பாகக் கவனிக்கவும்.

2. சம்பள அளவுத்திட்டம்.—இப்பதவிக்குரிய திரட்டிய வருடாந் தச் சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—

ரூ. 2,750—13 × 60—3,540.

குறிப்பு.—1.10.69 க்கு முன்னரான இதற்கொத்த வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் ரூ. 834—42—1,338 ஆகும்.

3. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—(i) இப்பதவி நிரந்தரமானது. தெரிவு செய்யப்படும் அபேட்சகர் அரசாங்கத் தின் கீழ் ஏற்கனவே உபகாரச் சம்பள உரித்துடைய பதவி ஒன் றினை வகிக்காவிடின், அவர் அ. சே. சே. நிதிக்குக் கட்டணம் செலுத்தவேண்டும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர், நியமனத் திகதியன்று அரசாங்க அல்லது உள்ளூராட்சிச் சேவையில் உப காரச் சம்பள உரித்துடைய பதவியை வகிப்பவராயின் அவர் தொடர்ந்து உபகாரச் சம்பள உரித்து அந்தஸ்தை அனுபவிப்பார். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் ஏற்கனவே அரசாங்க சேவை யில் இல்லாவிடின், முதற்கண், மூன்று வருடகாலத்துக்குத் தகுதி காண் முறையில் நியமிக்கப்படுவார். அரசாங்க சேவையில் நிரந் தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான பதவியை வகிக்கும் ஓர் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படின் அவருடைய நியமனம் ஒரு வருட காலத்துக்குப் பதில் கடமை முறையில் அமையும்.

(ii) தெரிவு செய்யப்படுபவர், வேலையில் மேலும் அமர்த்தப்படு தற்கு தகுதியற்றவராகத் தகுதிகாண் காலத்தில் காணப்படு மிடத்து, அவர் ஏற்கனவே நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம் பள உரித்துடையதுமான ஒரு பதவியை வகிப்பவராயின் தகுதி காண் காலத்தில் அல்லது அக்கால முடிவில் அவருடைய நிலை யான பதவிக்கு அவர் திருப்பி அனுப்பப்படுவார்; நிரந்தரமான தும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை வகியாதவராயின் சேவையிலிருந்து விலக்கப்படுவார்.

(iii) நியமிக்கப்படும் ஒருவர் சிங்களத்தில் விதிக்கப்பட்டுள்ள தரத்தை தகுதிகாண் காலத்தில் அடையத்தவறுமிடத்து சேவையி லிருந்து விலக்கப்படுவதற்கு அவர் பாத்திரராவார்; எனினும் சிங்களத்தில் தேர்ச்சி பெறுதற்கு அவர் உண்மையில் முயற்சி எடுத்துள்ளாரென நியமிக்கும் அதிகாரி திருப்திப்படின் சேவை யிலிருந்து அவரை விலக்குதல் பிற்போடப்படலாம். விதிக்கப் பட்ட பரீட்சையில் உரிய திகதியிலிருந்து நியாயமான கால எல் லைக்குள் அவர் சித்தி அடைந்தால் நியமிக்கும் அதிகாரியால் அவ ருக்கு ஏற்படும் மூதுமுறை இழப்பு புறக்கணிக்கப்படலாம்.

**4. கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும்.**—(i) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான கடைசித் திகதியன்று 21 வயதுக்கு மேற்பட்டவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். அரசாங்க ஊழியர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாடு அமையாது.

(ii) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்கவேண்டும்.

(iii) கணிதம் அல்லது எண்கணிதத்துடன் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி அடைந்திருக்க வேண்டும்; அல்லது

(iv) இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி சிங்கள/தமிழ் மொழி, கணிதம் அல்லது எண்கணிதம் உட்பட ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதர (சாதாரணதரப்) பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்; அல்லது

(v) கணிதம் அல்லது எண்கணிதம் உட்பட சமமான அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

(vi) கட்டட அமைப்பில் அல்லது ஒரு கனிட்ட தொழிநுட்ப நிலையத்தின் குடிசார் எந்திரவியல் துறையில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத கால கற்கை நெறி ஒன்றினைச் சித்திகரமாகப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்; அல்லது

(vii) கட்டட அமைப்பில் அல்லது ஒரு கனிட்ட தொழில்நுட்ப நிலையத்தின் குடிசார் எந்திரவியல் துறையில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத கால கற்கை நெறி ஒன்றினைப் பின்பற்றி இருப்பதுடன் கட்டட அமைப்பில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத கால அனுபவம் பெற்றிருக்க வேண்டும்; அல்லது

(viii) ரூ. 500,000 க்குக் குறையாத பெறுமதியான கட்டட அமைப்பு வேலைகளை மேற்கொள்தற்கு ஓர் அரசாங்க திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஓர் ஒப்பந்தகாரனின் கீழ் கட்டட அமைப்பு ஓவசியராக 5 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருக்க வேண்டும்; அல்லது

(ix) அரசாங்க திணைக்களம் ஒன்றில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் கட்டட ஓவசியர் பதவி ஒன்றில் 5 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருப்பதுடன் அடிப்படைச் சம்பளமாக வருடாந்தம் ரூ. 750 க்குக் குறையாத சம்பளம் பெறுபவராய் இருக்க வேண்டும்.

**5. விண்ணப்பதாரிகள்** தமது விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலப் பிரதிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும்:—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (**முக்கிய குறிப்பு.**—ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் ஒழுங்குச் சட்டத்தின் நோக்கத்துக்காகக் கொடுபடும் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(ஆ) பெற்றுள்ள ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரமும் தொழிற் தராதரப் பத்திரமும் அல்லது இவற்றில் எவையேனும்.

(இ) சமீபகாலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டவையும் விண்ணப்பதாரியின் ஒழுக்கம், இப்பதவிக்கான அவருடைய தகுதி ஆகியவற்றைக் குறிப்பிடுபவையுமான மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள் (ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளவர்கள் நற்சாட்சிப் பத்திரங்கள் அனுப்பவேண்டியதில்லை).

**குறிப்பு.**—அனுப்பப்படும் சான்றிதழ்களின் பிரதிகள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

6. மேற்போந்த 5 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ளவர்களும் அரசினர் சேவையில் உள்ளவர்களுமான விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்ப வேண்டும்.

7. அச்சடிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படமாட்டா. கீழே காணப்படும் மாதிரிப்படிவ முறைக்கமையவே விண்ணப்பப் படிவங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

8. அரசினர் செய்திமடலின் I ம் பகுதி II ம் பிரிவில் பிரசுரிக்கப்படுபவையும் பகிரங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு ஏற்புடையனவையுமான பொது நிபந்தனைகளைக் கவனிக்குமாறு விண்ணப்பதாரிகள் கேட்கப்படுகின்றனர்.

9. விண்ணப்பங்கள் யாவும் பெற்றுக்கொண்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். விண்ணப்பங்கள் ஏற்கப்படும் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைகளுக்குள் அத்தகைய அறிவித்தல்களைப் பெறாதவரும் விண்ணப்பதாரிகள் அது பற்றி செயலாளர், பொது நிர்வாகக் கிளை, கல்வி அமைச்சு, கொழும்பு 2 என்ற விலாசத்துக்கு அறிவிக்க வேண்டும். இங்ஙனம் செய்யத்தவறும் எவ்விண்ணப்பதாரியும் தமது உரிமைகள் சீர்தூக்கப்படுதற்கான உரிமையை இழப்பவராவர்.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

தொடர்பிலக்கம்: பொ. நி. 20/165,
கல்வி அமைச்சு,
கொழும்பு 2,
21.3.1973.

### மாதிரி படிவம்

இல. பொ. நி. 20/165.

ஓவசியர், II ஆந் தர பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப்பெயர்:——.
(தெளிவாக எழுதவும்)
(அ) சொந்தப் பெயர்:——.
(ஆ) ஏனைய பெயர்கள்:——.

2. தபால் விலாசம்:——.

3. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுதற்கான கடைசித் திகதியன்றுள்ளபடி சரியான வயது:—.
வரு:——, மா:——, நா:——.

4. பிறந்த திகதி:——.
(பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்).

5. சாகியமும் அது எங்ஙனம் பெற்றுக்கொள்ளப்பட்டதெனவும்:——.
பின்வருவோர் பிறந்த இடம்:—
(அ) விண்ணப்பதாரி:——.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன்:——.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிபாட்டன்:——.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன்:——.

6. விண்ணப்பதாரி விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா?:——.
(விவாகம் செய்திருப்பின் விவாகம் செய்த திகதி, பிள்ளைகளின் எண்ணிக்கை ஆகியவற்றைக் குறிப்பிடவும்)

7. படித்த பாடசாலைகளும் கல்லூரிகளும்:—.
(சேர்ந்த, விலகிய திகதிகளுடன்)
(அ) பொதுக் கல்வி:——.
(ஆ) உயர்தொழிற் கல்வி:——.

8. (அ) கல்வித் தராதரங்கள்:——.
(பெற்றுக் கொள்ளப்பட்ட ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்).
(ஆ) பின்வரும் மொழிகளில் பெற்றுள்ள அறிவு:—.
(அ) சிங்களம்:——.
(ஆ) தமிழ்:——.
(இ) ஆங்கிலம்:——.

9. உயர்தொழிற் தராதரங்கள், தொழில்நுட்பத் தராதரங்கள் பெற்றிருப்பின் அவை பற்றிய விபரங்கள் திகதிகளுடன்:——.
(அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனங்களில் அங்கத்துவம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள டிப்ளோமா அல்லது வேறு யாதேனும் தராதரப் பத்திரங்களுக்குச் சான்றாக அவற்றின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)

10. பாடசாலையை/கல்லூரியை விட்டகாலம் தொடக்கம் பார்த்த உத்தியோகங்கள்:——.
(சேர்ந்த திகதிகளும் விலகிய திகதிகளும் பெற்ற சம்பளங்களும் கொடுபடவேண்டும்)

11. விசேட உரிமைகள், தராதரங்கள், பயிற்சி, அனுபவம் ஆகியவை பற்றிய விபரங்கள்:——.

12. விண்ணப்பதாரி பற்றி தேவையான தகவல் கொடுத்தற்கான மூன்று மத்தியஸ்தர்களின் பெயர்களும் பதவிப் பெயர்களும்:——.

13. விண்ணப்பதாரி நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றுள்ள மூன்று பெயர் பெற்றவர்களின் பெயர்களும் பதவிப் பெயர்களும் :————.

(சமீப காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட மூன்று நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகளே—மூலப்பிரதிகளல்ல—அனுப்பப்பட வேண்டும்)

14. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின் அதன் அறவு :————.

மேலே நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் சரியானவையெனவும் உண்மையானவையெனவும் இத்தால் அத்தாட்சிப் படுத்துகின்றேன். இவ்விபரங்களில் எவையேனும் உண்மையற்றவையென நான் தெரிவு செய்யப்படுதற்கு முன் காணப்படின் தகுதியற்றவராக்கப்படுவேன் எனவும், தெரிவு செய்யப்பட்ட பின் காணப்படின் நஷ்ட ஈடின்றி சேவையிலிருந்து விலக்கப்படுவேன் எனவும் நான் அறிவேன்.

————,
கையொப்பம்.

திகதி :————.

3-1207—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

இல : சுபேர/ஆய/2/2.

## சிறு ஏற்றுமதிப்பயிர்கள் திணைக்களம்

### விரிவாக்க அலுவலர் பதவிகள்

சிறு ஏற்றுமதிப்பயிர்கள் திணைக்களத்திலுள்ள விரிவாக்க அலுவலர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதன் கீழ் தரப்பட்டுள்ள மாதிரிப்படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு அதிபதி, சிறு ஏற்றுமதிப்பயிர்கள் திணைக்களம், 159, தர்மபால மாவத்தை, த. பெ. இல. 1524, கொழும்பு 7 என்னும் முகவரிக்கு 1973 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 30 ந் திகதியிலன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக பதிவஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் இவ்வலுவலகத்தால் வழங்கப்படமாட்டா. விண்ணப்பம் அனுப்பும் தபால் உறையின் மேல் இடது பக்கத்தில் " விரிவாக்க அலுவலர் பதவி " எனக் குறிப்பிடப்படவேண்டும்.

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பளமற்றவையுமாகும். உதவுதொகைகள் அரசாங்க சேவைச் சகாய நிதிக்குச் செலுத்தப்படல் வேண்டும். இந்நியமனங்கள், முதலில், மூன்றாண்டு காலத் தகுதிகாண் நிலையிலிருக்கும்.

(ii) நியமனம் பெறுவோர் இத்திணைக்களத்தின் வெளிக்கரும அலுவலராகுவாராகையால் பொது விடுமுறை, நோன்மதி நாட்களை ஓய்வு நாட்களாக எடுத்துக்கொள்ளத் தக்கவராகார். எனினும் அவர்கள் நிலயத்தில் இல்லாதிருக்கும் போது வேலையைச் செவ்வனே நிறைவேற்றத்தக்க ஒழுங்குகள் செய்யப்படுமிடத்து எந்நாளிணையும் எந்நேரத்தையும் ஓய்வுக்காக எடுத்துக்கொள்ளலாம்.

(iii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் நியமனம் மூன்று ஆண்டுகளுள் சிங்கள மொழித் தேர்ச்சி பெற்று சிங்கள மொழித் தேர்ச்சிப் பரீட்சைகளில் சித்தியடைதலும் வேண்டும். முதலாம் ஆண்டிலே தமிழ் மொழியில் வேலை செய்யும் அறிவும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**3. சம்பளமும் படிகளும்.**—இப்பதவிகளுக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

**திரட்டிய சம்பளம்**

வகுப்பு II—ஆண்டொன்றுக்கு ரூபா 3,864—19 × 144—4 × 180 ரூபா 7,320. (ஆண்டொன்றுக்கு ரூ. 4,584 லும் ஆண்டொன்றுக்கு ரூபா 6,024 லும் வினைத்திறமைகாண் தடைகளுள)

வகுப்பு I—ஆண்டொன்றுக்கு ரூபா 7,500—3 × 180—2 × 240—ரூபா 8,520.

**விசேட வகுப்பு.**—ஆண்டொன்றுக்கு ரூபா 8,760—3 × 240—ரூபா 9,480.

குறிப்பு.—(i) நன்கு மதிக்கப்படும் ஒரு பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞானப் பட்டதாரிகளும் பேராதனை அல்லது குண்டசாலை விவசாயப் பாடசாலையின் சிரேட்ட தராதரப் பத்திரம் முதலாம் அல்லது இரண்டாம் பிரிவுச் சித்தியுடன் உள்ளோர்களும் தெரிவுசெய்யப்படுவராயின் அன்னவர் மேற்படி சம்பளத் திட்டத்திலே ஆரம்பச் சம்பளமான ரூபா 3,864/- பெற்றுக்கொள்வர். அவர்கள் நியமனம் பெற்றதிலிருந்து ஓர் ஆண்டுக்குள் இத்திணைக்களத்தால் நடாத்தப்படும் சிங்களம்/தமிழ் மூல வாய்மொழிப் பரீட்சையிற் சித்திபெறுதல் வேண்டும். விதிக்கப்பட்ட காலவெல்லைக்குள் இப்பரீட்சையிற் சித்திபெறத் தவறுமிடத்து அடுத்த சம்பளவேற்றம் பின்போடப்படும்.

(ii) பேராதனை அல்லது குண்டசாலை விவசாயப் பாடசாலையின் சிரேட்ட தராதரப் பத்திரம் சாதாரண சித்தியுடன் பெற்றுள்ளோர் அல்லது குறிப்பிடப்பட்ட பாடங்களையுடைய கல்விப் பொதுத் தராதரப் (உயர்தரம்) பத்திரத்தையும், பயிர்ச் செய்கையில் மூன்று வருட அனுபவத்தையும் பெற்றுள்ளோர் தெரிவு செய்யப்படுமிடத்து அன்னவர் இத்திணைக்களத்தால் நடத்தப்படும் தகுதிகாண் நிலைப் பரீட்சையிலே முதலாம் பாகப் பரீட்சையிற் சித்தியடையும் வரை ஆண்டொன்றுக்கு ரூபா 3,180/- யில் மட்டும் அமர்த்தப்படுவர். மேற்படி பரீட்சையிற் சித்தி பெற்ற பின்னர் ஆண்டொன்றுக்கு ரூபா 3,864/- ஆன மேற்படி சம்பளத்திட்டத்தின் துவக்கச் சம்பளத்தைப் பெறத் தகுதியுடையோராவர். அவர்களும் நியமனத்திலிருந்து ஓர் ஆண்டுக் காலத்துள் சிங்களம்/தமிழ் மூலவாய் மொழிப் பரீட்சையில் சித்திபெறுதல் வேண்டும். விதிக்கப்பட்ட காலத்துள் சித்தி பெறத்தவறின் அடுத்த சம்பளவேற்றம் பின்போடப்படும். இத்திணைக்களத்தின் தகுதிகாண் நிலையினோர்க்கான பரீட்சையின் முதலாம் பாகத்தில் ஓர் ஆண்டுக்குள் சித்தி பெறத் தவறுவோர் ஆண்டொன்றுக்கு ரூபா 3,864/- ஆன சம்பளத்தைப் பெற்றுக்கொள்ள முன்னர் சிங்களம்/தமிழ் மூல வாய்மொழிப் பரீட்சையிலும் சித்தி பெறுதல் வேண்டும்.

**4. தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்வருவனவற்றில் அவர்—

(அ) (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் விவசாயப்பட்டதாரியென்றும், அல்லது,

(ii) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்தை அல்லது சிங்கள அல்லது தமிழ் மொழியில் ஒரே தடவையில் ஐந்து பாடங்களில் எண் கணிதத்துடன் அல்லது கணிதத்துடன் இன்னும் நான்கு பாடங்களில் சித்திபெற்றுக் கிடைக்கப்பெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) த்தை அல்லது அதற்குச் சமானமான அல்லது உயர்வான பரீட்சைத் தராதரப் பத்திரத்தை உடையவர் என்றும்

**அத்துடன்**

விவசாயப் பாடசாலையின் சிரேட்ட தராதரப் பத்திரத்தை உடையவரென்றும்,

அல்லது

(iii) ஒரே தடவையில் இரசாயனவியலும் தாவரவியலும் அடங்க மூன்று விஞ்ஞான பாடங்களில் சித்திபெற்றுக் கிடைக்கப்பெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (உயர்தரம்) உடையவர் என்றும்

**அத்துடன்**

பயிர் செய்கையில் மூன்றுவருட அனுபவம் உடையவர் என்றும்,

(ஆ) விண்ணப்ப முடிவு திகதியிலன்று 22 வயதுக்குக் குறையாதவரென்றும் 35 வயதுக்கு மேற்படாதவரென்றும் (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பகாரருக்கு இவ்வயதெல்லைகள் ஏற்புடையதாகா).

(இ) சிறந்த நற்குணமுடையவரென்றும் உடல்நல முடையவரென்றும், திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும்.

குறிப்பு.—பயிர்செய்கையில் அனுபவமுடைய விண்ணப்பதாரருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

5. விண்ணப்பகாரர் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலப்பிரதிகள் அல்ல) தமது விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு. கு.—ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பு நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது).

(ஆ) மிக உயர்ந்த கல்விச் சான்றிதளும் உயர் தொழிற் கல்விச் சான்றிதளும் அல்லது உயர் தொழிற்றகைமைச் சான்றிதழ்.

(இ) சிங்கள மொழியிற் சித்தியெய்திய உயர் பரீட்சைச் சான்றிதழ்.

(ஈ) சமீப காலத்திற் பெற்ற குணச் சான்றிதழ்கள் இரண்டு (அரசாங்க சேவையிலிருந்துகொண்டு விண்ணப்பிப்போர் விடயத்தில் குணச்சான்றிதழ்கள் அணைக்கப்பட வேண்டியதில்லை).

குறிப்பு.—மேலே கேட்கப்படும் சான்றிதழ்களினதோ நற்சாட்சிப் பத்திரங்களினதோ பிரதிகள் திருப்பி அனுப்பப்பட மாட்டா.

6. அரசாங்க சேவையிலிருக்கும் விண்ணப்பகாரர் உரிய திணைக்களத்தலைவருக்கூடாகவே அவர் தம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பட்ட கால எல்லைக்குப் பிந்தி இக்காரியாலயத்துக்கு வந்து சேரும் விண்ணப்பங்கள் விதிக்கப்பட்ட காலத்துக்குள் உரிய திணைக்களத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவற்றைப் பிந்தி அனுப்புவதற்குரிய காரணங்களைக் காட்டி ஏற்றுக்கொள்ளுமாறு விதந்துரைக்கப்படாவிடின் ஏற்றுக்கொள்ளப்படா.

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான வேறெந்தக் கடிதத்தொடர்புகளும் அதிபதி, சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களம், 159, தர்மபால மாவத்தை, த. பெ. இல. 1524, கொழும்பு-7 என்னும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டுமேயொழிய இத்திணைக்களத்திலுள்ள எந்த அலுவலரதும் சொந்தப் பெயரிட்டு அனுப்பப்படல் ஆகாது.

8. இந்த வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I தொகுதி II இன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பகுதி நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளும் இவ் விளம்பரத்துக்கும் பொருந்தும்.

9. விண்ணப்பங்கள் கிடைத்தமை அறிவிக்கப்படமாட்டாது.

கலாநிதி ஈ. ஜயனெத்தி,
அதிபதி,
சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களம்.

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களம்,
159, தர்மபால மாவத்தை,
த. பெ. இல. 1524,
கொழும்பு-7.
திகதி 21 மார்ச்சு, 1973.

### விண்ணப்ப மாதிரிப் படிவம்

1. முழுப் பெயர் :————.
(அ) முதற் பெயர் :————.
(ஆ) பிற பெயர்கள் :————.
2. விலாசம் :————.
3. பிறப்புத் தேதியும் 30.4.1973 ல் சரியான வயதும் :————.
(பிறப்புப் பதிவுச் சான்றிதழ் பிரதி அணைக்குக).
4. நாட்டினமும் பெறப்பட்ட விதமும் :————.
5. பிறப்பிடம் :—
(அ) விண்ணப்பகாரர் :————.
(ஆ) தந்தை :————.
(இ) தந்தை வழிப்பாட்டன் :————.
(ஈ) தந்தை வழிப்பூட்டன் :————.
6. திருமணமானவரா, தனியானவரா ? :————.
7. கல்வி/தொழிற்றகைமைகள் :————.
(பிரதிகள் அணைக்குக.)
8. சிங்கள மொழித் தேர்ச்சி :————.
(சான்றிதழ் அணைக்குக.)
9. அரசாங்க சேவை முன்னர் உண்டா ? உண்டானால், எப்பதவி? விலகுவதற்குரிய காரணம் யாது ? :————.
10. சிறப்புத்தகைமைகள், அனுபவம், கோரிக்கைகள் :————.
11. குணச்சான்றிதழ்கள் வழங்கியவர்களின் பெயரும், பதவியும் :————.
(குணச்சான்றிதழ்களின் பிரதிகள் அணைக்குக)
12. பிற விபரங்கள் :————.

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் உண்மையானவை என்றும் சரியானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதனுள் அடங்கியுள்ள விபரங்கள் பொய்யானவை அல்லது பிழையானவையெனத் தெரிவு செய்யப்படுமுன்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து தகைமை நீக்கம் செய்யப்படுதற்கும் நியமனத்திற்கும் பின்னர் கண்டு பிடிக்கப்படுமிடத்து நட்ட ஈடு எதுவுமின்றி பதவி நீக்கம் செய்யப்படுதற்கும் ஆளாவேன் என்பதனை நான் அறிவேன்.

விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி.————.

3-1204—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

## நெல் சந்தைப்படுத்தல் சபை

### உதவி தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பதவி
### தரம் VI

நெல் சந்தைப்படுத்தல் சபையில் மேற்காணும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், கல்விச் சான்றிதழ், குணச் சான்றிதழ், பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ஆகிய சாதனங்களின் பிரதிகளுடன், பதிவுத் தபால் மூலம் ஆள்ணி முகாமையாளர், நெல் சந்தைப்படுத்தல் சபை, இல. 5 எலிபாங்கு வீதி, கொழும்பு 5 என முகவரியிட்டு 1973 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். அஞ்சலில் தாமதமாகிக் கிடைத்த விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது. சபையினால் விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது. அபேட்சகர்கள் விண்ணப்பங்களை தாங்களே தயாரித்துக்கொள்ளல் வேண்டும்.

**தகைமைகள்.**—சிரேஷ்ட தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தினால் பொறிமுறை எந்திரவியலில் வழங்கப்பட்ட கனிஷ்ட தொழில்நுட்ப அலுவலர் (J. T. O.) தகைமைப் பத்திரம் அல்லது தொழில் நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்பட்ட டிப்ளோமா தாரார் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும். எந்திரத் தொழில் நிறுவனம் அல்லது தொழிற்சாலையில் கடமையாற்றி அனுபவம் பெற்றிருப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**சம்பளம்.**—ரூபா 345/-—17×15—ரூபா 600/- எல்லாம் உட்பட மாதாந்தம்.

**பொது.**—தெரிவு செய்யப்படுவோர் நெற்குற்றுதல் வேலையில் பயிற்சி பெறவேண்டும். தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் நியமனம், அரிசி ஆக்கத் திட்டத்தின் பல்வேறு வேலைகளில் சபையினால் ஏற்றுக்கொள்ளக் கூடிய தகுதிக்கு தேர்ச்சி பெற்றால் தான், உறுதிப்படுத்தப்படும்.

**பொது நிபந்தனைகள்**

(அ) இலங்கை வாசியாக இருத்தல் வேண்டும்.

(ஆ) 1973 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ம் திகதியன்று 22 வயதுக்கு குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

(இ) நியமனம் பெறுவோர் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவோர் என்னும் நிபந்தனைக்குட்படுதல் வேண்டும்.

(ஈ) அரசாங்க திணைக்களம் அல்லது கூட்டுத் தாபனங்களில் இருந்து தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களைத் தவிர்ந்த ஏனையோர் ஓராண்டு தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவர்.

(உ) அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் திணைக்கள அல்லது கூட்டுத்தாபன தலைவர்கள் மூலமாக அனுப்பப்படல் வேண்டும்.

(ஊ) சேமலாப நிதிக்கு சம்பளத்தில் ஊழியரால் 6 வீதமும் சபையினால் 9 வீதமும் செலுத்தப்படும்.

(எ) விண்ணப்பப் பத்திரத்தில், அபேட்சகர் நிரந்தரமாக வசிக்கும் மாவட்டத்தின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.

(ஏ) நியமனம் பெறுவோர் இலங்கையில் எப்பாகத்திலும் கடமையாற்ற ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமை அறிவிக்கப்படமாட்டாது.

ஆளணி முகாமையாளர்,
நெல் சந்தைப்படுத்தல் சபை.

த. பெ. இல. 205,
இல. 5, எலிபாங்கு வீதி,
கொழும்பு 5,
1973, மார்ச்சு 13 ம் திகதி.

3-1216—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

### தொழில்நுட்ப உதவியாளர் பதவி வெற்றிடங்கள்

வடிவ அமைப்பு, கைத்தொழிற் பொறிகள் நிறுவுதல், இயக்குதல், தொழிற்சாலே, உற்பத்திப் படிமுறை ஆகியவற்றில் உயர்ந்த திறமை காட்டத்தக்க தகைமைவாய்ந்த சில தொழில் நுட்ப உதவியாளர்கள் இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்குத் தேவைப்படுகின்றனர். சிவில், மின், கைத்தொழில், இரசாயனம், இறப்பர் ஆகிய துறைகளில் பதவி வெற்றிடங்கள் உண்டு. தகைமைகளும், வேதனத் திட்டமும் வருமாறு :—

(அ) தகைமைகள்.—கனிட்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர் சான்றிதழ் அல்லது அதற்குச் சமனுன தொழிற் பயிற்சியுடன் கூடிய தொழினுட்பவலர் பயிற்சிநெறியும் தகைமையும் பெற்றபின்னர் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பொறியியல் தாபனத்தில் மிகக் குறைந்தது ஓராண்டு அனுபவமும்.

(ஆ) வயது.—விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுதற்கான கடைசித் தினத்தன்று விண்ணப்பகாரர் 22 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) வேதனத் திட்டம்.—மாதமொன்றுக்கு ரூபா 475—25 × 12—ரூபா 775/- எல்லாம் உட்பட.

மேற்பார்வை செய்தல் உட்பட விரிவான அனுபவமுடைய விண்ணப்பகாரர்களே, வேதனத்திட்டத்தில் பொருத்தமான ஒரு நிலையில் அமர்த்துவதுபற்றி ஆலோசிக்கப்படலாம்.

மொறட்டுவை, கட்டுபெத்தை தொழில் நுட்பச் சேவைகள் நிலையத்திலேயே பதவி வெற்றிடங்கள் உள்ளன. ஆனால் நியமனம் பெறுவோர் நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்ற வேண்டப்படுவர்.

விண்ணப்பங்கள், இவ்வலுவலகத்திற்கு நேரில் வந்து அல்லது சொந்த முகவரியிட்டு தபால்தலைகள் ஒட்டிய 9½" × 4½" அளவிலான கடித உறைகள் அனுப்பிப் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் பதிவுத் தாபலில் இதன் கீழ் கையொப்பமிட்டுள்ளவருக்கு 1973 ஏப்றல் 10 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பப்படல் வேண்டும். அரசாங்கப் பணி செய்வோர் அல்லது நியதிச்சட்டமுறைச் சபைகள், யாக்கங்களிற் பணிசெய்வோரிடமிருந்து கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் விண்ணப்பகாரர் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் விடுவிக்கப்படுவர் என இணைக்களை சபை, அல்லது யாக்கத் தலைவர் உறுதிப்படுத்தியிருந்தால் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். குறிப்பிட்ட திகதிக்குப் பிந்தி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா. தாமதமான அல்லது அஞ்சலில் இழக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு இச்சபை பொறுப்பாளியாகாது.

பொது முகாமையாளர்,
இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை.

இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை,
16, கிறகறீஸ் வீதி,
கொழும்பு 7,
21, மார்ச் 1973.

3-1237—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

### குருநாகல் மாவட்டத்தில் கட்டுகம்பளை ஹத்பத்துப் பிரிவில் (எலபடகம பகுதியில்) முஸ்லிம் விவாகப் பதிவுகாரர் பதவி

கட்டுகம்பளை ஹத்பத்துப் பிரிவில் எலபடகம பகுதியில் குடியிருக்கின்ற, அப்பகுதியில் சில காலமாக வசிக்கின்ற, அல்லது பொதுமக்களால் அங்கீகரிக்கப்படக்கூடிய விவாகமாகிய ஆண் முஸ்லீம்கள் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய ஏனைய தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் இந்த அலுவலகத்திலும் மற்றும் இப் பகுதியிலுள்ள பிரசித்த இடங்களிலும் காரியாலயங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்பப்படுவதோடு 1973 ம் ஆண்டு மே மாதம் 5 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பாக எனக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

சந்திரானந்த த சில்வா,
மாவட்டப் பதிவாளர்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
குருநாகல்,
1973 ம் ௵ மார்ச்சு ௴ 13 ந உ.

3-1082—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53.

---

### ஸ்ரீ லங்கா கடற்படை

### மருத்துவ அலுவலர் பதவி

ஸ்ரீ லங்கா கடற்படையில் மருத்துவ அலுவலர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் ஸ்ரீ லங்கா கடற்படையின் நிலையான கடற்படையில் நிலையான ஆணையுடைய சந்திர சிகிச்சைத் துணைநிலை அலுவலராகல் பதவி வழங்கப்பெறுவர்.

3. (அ) மருத்துவ அலுவலரின் சம்பள வீதம் சுகாதாரச் சேவைத் திணைக்களத்து மருத்துவ அலுவலர்களுக்குப் பொருத்தமான வீதங்களாகும்.

(ஆ) பின்வரும் படிகளும் செலுத்தப்படும் :—

(i) சேவைப்படி—துணைநிலை அலுவலருக்கும்—துணைநிலை ஏவுநர்க்கும் மாதத்துக்கு 180 ரூபா, ஏவுநர்க்கு மாதத்துக்கு 225 ரூபா.

(ii) இளைப்பாற்றுச் சம்பளத்துக்கு உரிமையற்ற படி, இதே தகைமையுடைய அரசாங்க மருத்துவ அலுவலர்களுக்குப் பொருத்தமான வீதத்தில் செலுத்தப்படும்.

(iii) கடற்படைச் சம்பளக் கோவையை ஏற்பாடு செய்துள்ளவாறு தகைமைச் சம்பளம் அளிக்கப்படும்.

(iv) சீருடைப்படி பின்வருமாறு செலுத்தப்படும் :— அயனமண்டலப் பிரதேசத்திற்குரிய ஒரு சீருடைக்கு தொடக்கத்தில் 1,000 ரூபா மேலும் மாதமொன்றுக்கு 25 ரூபா ஒரு சீருடை பேணும் படியாக நியமனத் திகதியிலிருந்து வழங்கப்படும்.

4. தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் விவாகமானவராஞல், விவாகமானவருக்குரிய (இருந்தால்) வீட்டில் வசிப்பதற்கும் வேலையாள் படி ரூபா 75 ற்கும் தகுதியுடையவர். விவாகமாகாதவராயின் வேலையாளின் சேவையும் கடற்படை விடுதி வசதியுமிருக்கும்.

5. (1) அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுக் காலத்திற்குக்காலம் திருத்தப்பட்ட 1934, பெப்ரவரி 5 இன் இளைப்பாற்றுச் சம்பள அறிக்கையில் அமைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் ஆணைப்படுத்தப்படும் திகதிக்கு முன்னர் அரசாங்கத்தின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளப் பதவி ஒன்றினை வகிப்பவராயிருப்பின் அவர் தொடர்ந்து இளைப்பாற்றுச் சம்பளத்திற்கு உரித்துடையவராவர்.

(2) மேற்கூறப்பட்ட பந்தி 5(1) க்கு அமையாத அபேட்சகர் ஒருவர் இளைப்பாற்றுச் சம்பளத்திற்கு அருகதையற்றவராவர். ஆனால் 1972, சனவரி 10 இல் வெளியிடப்பட்ட இளைப்பாற்றுச் சம்பளத் திணைக்களச் சுற்றறிக்கை இல. 3 இல் கூறப்பட்டபடி அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு உதவுதொகை அளிக்குமாறு வேண்டப்படுவர்.

(3) மேலும், உயர்ச்சிகள், முன்னேற்றங்கள், சேவை நிபந்தனைகள் சம்பந்தமான ஏதாவது விபரம் கொழும்பு, கடற்படைத் தலைமை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

6. விண்ணப்பகாரர் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டிருத்தல் வேண்டும் :—

(அ) தேசிய இனம்.—அபேட்சகர்கள் ஸ்ரீ லங்கா பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) வயது.—அபேட்சகர்கள் 1973 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 30 ஆம் திகதி 32 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

(இ) தொழில் கல்வி, கல்வி தகைமைகள்.—அபேட்சகர்கள் ஸ்ரீ லங்கா மருத்துவர் சபையில் ஈராண்டுக்கேனும் மருத்துவம் செய்வதற்குப் பதியப்பட்டவரும், மருத்துவத்திலும் சந்திர சிகிச்சையில் பட்டம் பெற்றவராகவும் அல்லது அதற்கு மேலதிகத் தராதரமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஈ) மருத்துவத் தகுதி.—அபேட்சகர்கள் நியமனத்திற்கு முன் கடற்படையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட மருத்துவச் சோதனையில் தேர்ச்சியும், கடற்படை நிபந்தனையில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவ தராதரத்திற்கேற்ப இருத்தல் வேண்டும்.

7. இவ்விளம்பரத்தின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்தைப் போல் தங்கள் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பங்களைத் தயார் செய்து அனுப்ப வேண்டும். விண்ணப்பங்கள் 1973 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாக "கடற்படைத் தளபதி, கடற்படைத் தலைமை அலுவலகம், தபாற்

பெட்டி இல. 593, கொழும்பு-1" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் தபால் உறையில் இடது மேற் புறத்தில் "மருத்துவ அலுவலருக்கு விண்ணப்பம்" என எழுதப் படல் வேண்டும். விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்படும்.

8. அரசாங்க சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்களது விண்ணப்பங்கள் சுகாதார சேவை அதிபருக்கு ஊடாக அனுப்பப்படல் வேண்டும். குறித்த அலுவலர் தெரிவு செய்யப்படுமிடத்து, அச்சேவையிலிருந்து விடுவிக்கப்படுவர் எனக்கூறும் கடிதமொன்றுடன் அனுப்பப்படல் வேண்டும்.

9. கீழ்க்காணப்படும் பிரதிகள் விண்ணப்பங்களுடன் இணைக்கப் படுதல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ்.

(ஆ) கூடுதலான கல்வித் தகைமையைக் காட்டும் சான்றிதழும் உயர் தொழிலுக்குரிய சான்றிதழும் அத்துடன் ஆற்றிய நியமனங்களுக்குரிய சான்றிதழ்களும்.

(இ) விண்ணப்பகாரரை நன்றாகத் தெரிந்த பொறுப்பு வாய்ந்தவர்களிடமிருந்து பெறப்பட்ட ஆகக் குறைந்தது இரு நற்சான்றிதழ்கள்.

10. விண்ணப்பங்கள் மேற்கூறிய நிபந்தனைகளின்படி இருந்து அவற்றின் தொகை காரணமாக ஒரு பூர்வாங்கத் தெரிவு தேவைப் படின் அது நடாத்தப்படும். இறுதித் தெரிவு பாதுகாப்பு, வெளி நாட்டலுவல்கள் அமைச்சரால் நியமிக்கப்பட்ட தெரிவுச் சபையால் நேர்முகப் பரீட்சையின் பின் செய்யப்படும்.

11. நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்ட அபேட்சகருக்கு நேர்முகப் பரீட்சை நடாத்தும் காலம், இடம், திகதி எழுத்துமூலம் அறிவிக்கப்படும். இந்நேர்முகப் பரீட்சை கொழும்பில் நடைபெறும். இதற்கான பிரயாணச்செலவோ வேறு செலவுகளோ அரசாங்கத்தால் கொடுக்கப்படமாட்டாது. நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்படா அபேட்சகர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்படும்.

12. புதிய சேவையாளராயிருந்தால், அரசாங்கத்தின் மொழிக் கொள்கையையும் விசேடமாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளையும் செயற்படுத்துவதற்கு இதுவரையில் செய்யப்பட்ட சட்டங்களுக்கோ இதன்பின் இயற்றப்படும் சட்டங்களுக்கோ இணங்கி நடக்குமாறு வேண்டப் படுவர்.

டீ. பி. குணசேகர,
கொமடோர்,
பதில் கடற்படைத் தளபதி.

தலைமை அலுவலகம்,
ஸ்ரீலங்கா கடற்படை,
தபாற் பெட்டி இல. 593,
கொழும்பு 1, 1973, மார்ச் 22.

**மருத்துவ அலுவலருக்கான விண்ணப்பம்**

ஸ்ரீலங்கா கடற்படை

1. முழுப் பெயர் (பெரிய எழுத்துக்களில்) :————.
2. தேசிய இனம் :————.
   (வம்சாவழி அல்லது பதிவுவழி, இலங்கையர் எனக் குறிப்பிட வேண்டும். பதிவுவழி என்றால் பதியப்பட்ட திகதி, சான்றிதழின் இலக்கம் குறிப்பிட வேண்டும்)
3. முகவரி :—
   அலுவலகம் :————.
   சொந்த :————.
4. பிறந்த திகதி :————.
5. பெற்றோரின் விபரங்கள் பின்வருமாறு தருக :————.

| | முழுப் பெயர் | பிறந்த இடம் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | .............. | .............. | .............. |
| தாய் | .............. | .............. | .............. |

6. நீர் விவாகமானவரா அல்லது தனியாளா ? :————.
7. பல்கலைக்கழகத்தில் அல்லது பள்ளிக்கூடத்தில் உடற்பயிற்சி அல்லது விளையாட்டுச் சம்பந்தப்பட்ட தனிச் சிறப்புத் தகைமைகள் ஏதும் உண்டா ? :————.
8. பல்கலைக்கழகத்தில் அல்லது பள்ளிக்கூடத்தில் குறிப்பிடத் தக்க வேறு சாதனைகள் ஏதும் சாதித்தது உண்டா ? : ————.
9. ஆயுதந்தாங்கிய படையில் அல்லது தொண்டர் படைச் சேவையில் அல்லது பயிலுநர் சிறப்பணியில் அல்லது சாரணர் இயக்கத்தில் முன்னைய சேவை உமக்கு உண்டா ? :————.
10. இப்பதவிக்கு வேறு சிறப்புத் தகைமைகள் உண்டா ? :————.
11. ஆயுதந்தாங்கிய படைச் சேவைக்கு நீர் முன்னர் விண்ணப் பித்துள்ளீரா ? அங்ஙனமாயின் பெபேறு என்ன ? : ————.
12. கல்விகற்ற பாடசாலையினதும் பல்கலைக்கழகத்தினதும் பற்றிய பின்வரும் விபரங்கள் தருக :—
    பல்கலைக்கழகத்தினதும் பாடசாலையினதும் பெயர் :————.
    திகதி : சேர்ந்த :————. விட்ட :————.
    பகிரங்கப் பரீட்சைகள் :————.
13. பல்கலைக்கழகத்தை விட்டபின் ஆற்றிய தொழில் பற்றிய கீழ்க்காணும் விபரங்கள் தருக :————.

| வேலைகொள்வோரின் பெயர் | தொழிலின் தன்மை | சேவைக்காலம் தொடக்கம் வரைக்கும். |
|---|---|---|

14. நற்சான்றிதழ்கள் பெற்றுக்கொண்டவர்களின் பெயர்களும் முகவரிகளும் தருக :————.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

3-1247—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

**தேசிய பாற்சபை**

பகுதி நேர மருத்துவத் தொழிலாளர்

வெலிசரையிலுள்ள தேசிய பாற்சபையின் பால்மா மீளவடைக்கும் தொழிற்சாலையில் பகுதி நேர மருத்துவத் தொழிலாளர் பதவிவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகள் உடையவராக இருக்க வேண்டும்.

**தகைமைகள்.**—குறைந்தது எம். பி. பி. எஸ். (இலங்கை) பட்டத்துடன் 5 வருடம் தொழில் பார்த்த அனுபவம்.

வெலிசரைப் பால் மா மீள அடைக்கும் தொழிற்சாலையின் பிணியாய் நிலையத்துக்கு வேண்டிய மருந்து வகைகளை மருத்துவ உத்தியோகத்தர் மருத்துவ உத்தியோகத்தர் கலந்து கொடுக்க வேண்டும். இதற்கான செலவைச் சபை கொடுக்கும்.

**ஊதியம்.**—தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் மாதாந்தம் எல்லாம் உட்பட ரூபா 400 பெறுவர்.

**வேலை நேரம்.**—தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் (வேலைநாள் ஒன்றுக்கு, 2 மணித்தியாலம் வேலை செய்ய வேண்டியவராவர்.
வி,திசே யாகத்தர் ஜஉநயி இளைஆய்லைஸ் இளைஆலைஸ்ஸ்ஞ

**விண்ணப்பங்கள்** யாவும் முழுத் தகைமைகள், அநுபவங்கள், சான்று பகரக் கூடிய இருவரின் பெயர்கள் ஆகியவற்றுடன் கீழே கையொப்பமிட்டவருக்கு 1973 ஏப்பிரல் 21 ம் திகதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கும்படியாக அனுப்பப்பட வேண்டும்.

தலைவர்,
பாற்சபை.

பாற்சபைத் தலைமைக் காரியாலயம்,
நாரஹென்பிற்ற,
கொழும்பு 5,
20 மார்ச்சு 1973.

3-1250—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

**மட்டக்களப்பு மாவட்டத்தின் நூகம் பகுதியின் பிறப்பு, இறப்புப் பதிவாளருக்கும் ஏறாவூர் கோறளைப் பற்றுப் பகுதியின் (பொது) விவாகப் பதிவாளருக்குமான பதவி**

மேற்கூறப்பட்ட பதவிக்கு நூகம் பிறப்பு, இறப்புப் பதிவுப் பகுதிக்குள் நிரந்தரமாக வசிக்கும் ஆண், பெண் இருபாலரிடம் அல்லது அவ்விடத்தை வாசஸ்தலமாகக் கொண்டு அவ்விடம் குடியேறி, அப்பகுதிக்குள் போதிய நலனும் செல்வாக்குமுடைய நபர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் முடிவடையும் தினத்தன்று விண்ணப்பகாரர்கள் 21 வயதிற்குக் குறையாதவர்களாகவிருத்தல் வேண்டும். ஏற்கனவே, நிரந்தர அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பகாரர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாடு அமைவுறாது.

2. கல்வி, தகைமை சம்பந்தமான மேலதிக விபரங்களை இக்காரியாலயத்தில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் அறிவித்தல்களிலிருந்து அல்லது அப்பகுதிக்குள் இருக்கும் பொது இடங்கள், அலுவலகங்கள் அதாவது, பகுதி அரசிறை உத்தியோகத்தரின் அலுவலகம், கிராம சேவையாளரின் அலுவலகம், உள்ளூராட்சிச் சபையினரின் அலுவலகங்கள், கிராமக் கோடுகள், அஞ்சல் அலுவலகங்கள் பொலிசு நிலையங்கள், சனசமூக நிலையங்கள், பொதுச் சந்தைகள், கூட்டுறவுச் சங்கக் கடைகள் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டிருக்கும் அறிவித்தல்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

3. இவ்வலுவலகத்திலிருந்து பெறக்கூடிய விதித்த படிவத்தில் எல்லா விண்ணப்பங்களையும் தயாரித்து, 1973.4.30 திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவு அஞ்சலில் அனுப்ப வேண்டும்.

ஆர். பீ. வீரகோன்,
மாவட்டப் பதிவாளர்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
மட்டக்களப்பு,
1973.3.19.

3-1248—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

**குருநாகல் மாவட்டத்தில் வேஉட வில்லி ஹத்பததுப் பிரிவில் பாணகமுவைப் பகுதியில் முஸ்லிம் விவாகப் பதிவுகாரர் பதவி**

வேஉட வில்லி ஹத்பத்துப் பிரிவில் பாணகமுவைப் பகுதியில் குடியிருக்கின்ற, அப்பகுதியில் சிலகாலமாக வசிக்கின்ற, அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடிய விவாகமாகிய ஆண் முஸ்லீம்கள் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய ஏனைய தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் இந்த அலுவலகத்திலும் மற்றும் இப்பகுதியிலுள்ள பிரசித்த இடங்களிலும் காரியாலயங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்பப்படுவதோடு 1973 ம் ஆண்டு மே மாதம் 5 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

சந்திரானந்த த சில்வா,
மாவட்டப் பதிவாளர்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
குருநாக்கல்,
1973.3.12..

3-1252—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

மகாவலி அபிவிருத்திச் சபை

இச்சபைச் சேவையில் பின்வரும் பதவிகளுக்கு இலங்கையரிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் (இவ்வலுவலகத்திலிருந்து பெறப்படும் படிவங்களில்) 1973 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 23 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக, பதிவு அஞ்சலில் பொது முகாமையாளர், மகாவலி அபிவிருத்திச் சபை, இல. 11, யாவத்தை வீதி, கொழும்பு 5 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களைத் தபாலில் பெறவிரும்புவோர், தம்விலாசமிட்டு, முத்திரையொட்டப்பட்ட உறை அனுப்புதல் வேண்டும்.

**அகநிலைக்கணக்காய்வாளர்**

**வயது.**—35 வருடங்களுக்குக் குறையாமல்.

**வேதன அளவு.**—ரூ. 1,600—6 × 50—ரூ. 1,900.

**தகைமைகளும் அநுபவமும்.**—அங்கீகரிக்கப்பட்ட பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனமொன்றில் கூட்டாளியாய் அல்லது ஆகுசெலவு, முகாமை கணக்காளர் நிறுவன மொன்றில் உறுப்பினராய் இருத்தல் வேண்டும்; அத்துடன்,

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கணக்காளர்/கணக்காய்வாளராய் 10 வருடங்களுக்குக் குறையாத அநுபவம். இதில் குறைந்தது 8 வருடம் அவ்வகையான தகைமை அடைந்தபின்பு.

**பிரதான கணக்காளர்**

**வயது.**—35 வருடங்களுக்குக் குறையாமல்.

**வேதன அளவு.**—ரூ. 1,800—6 × 50—ரூ. 2,100 மாதமொன்றுக்கு.

**தகைமைகளும் அநுபவமும்.**—அங்கீகரிக்கப்பட்ட பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவன மொன்றில் கூட்டாளியாய் அல்லது ஆகுசெலவு, முகாமை கணக்காளர் நிறுவனமொன்றில் உறுப்பினராய் இருத்தல் வேண்டும்; அத்துடன்,

கணக்காளராய் 12 வருட அநுபவம். இதில் குறைந்தது 8 வருடம் அவ்வகையான தகைமைகளுக்குப் பின்பு. தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர் ரூ. 1,000 காசுப் பிணையும் காப்புறுதி அல்லது உத்தரவாத முறி ரூ. 5,000 க்கும் அளிக்கவேண்டும்.

**கணக்காளர் தரம் I**

**வயது.**—35 வருடங்களுக்குக் குறையாமல்.

**வேதன அளவு.**—ரூ. 1,400—6 × 50—ரூ. 1,700 மாதமொன்றுக்கு.

**தகைமைகளும் அநுபவமும்.**—அங்கீகரிக்கப்பட்ட பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனமொன்றில் கூட்டாளியாய் அல்லது ஆகுசெலவு முகாமைக் கணக்காளர் நிறுவனமொன்றில் உறுப்பினராயும், கணக்காளராகப் 10 வருட அநுபவமும். இதில் குறைந்தது 5 வருடம் அவ்வகையான தகைமைகளுக்குப் பின்பு தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் ரூ. 1,000 காசுப் பிணையும், காப்புறுதி அல்லது உத்தரவாதமுறி ரூ. 3,000 க்கும் அளிக்க வேண்டும்.

**கணக்காளர் தரம் II**

**வயது.**—30 வருடங்களுக்குக் குறையாமல்.

**வேதன அளவு.**—ரூ. 1,200—6 × 50—ரூ. 1,500 மாதமொன்றிற்கு.

**தகைமைகளும் அநுபவமும்.**—(அ) அங்கீகரிக்கப்பட்ட பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனமொன்றில் கூட்டாளியாய் அல்லது ஆகுசெலவு,முகாமை கணக்காளர் நிறுவனமொன்றில் உறுப்பினராயும், 3 வருட அநுபவம் அவ்வகையான தகைமைகளுக்குப் பின்பு.

அல்லது

(ஆ) பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனத்தின் இடைக்காலப் பரீட்சை அல்லது ஆகுசெலவு, முகாமை கணக்காளர் நிறுவனத்தில் பகுதிகள் I—III வரையும், 10 வருட அநுபவம் இவ்வகையான தகைமைகளுக்குப் பின்பு. தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர் ரூ. 1,000 காசுப்பிணையும், காப்புறுதி அல்லது உத்தரவாத முறி ரூ. 3,000 க்கும் அளிக்க வேண்டும்.

**கணக்காளர் தரம் IV**

**வயது.**—20 வருடங்களுக்குக் குறையாமல்.

**வேதன அளவு.**—ரூ. 600—10 × 30—ரூ. 900.

**தகைமைகளும் அநுபவமும்.**—அங்கீகரிக்கப்பட்ட பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனமொன்றில் இடைக்காலப் பரீட்சை

அல்லது

ஆகுசெலவு, முகாமை கணக்காளர் நிறுவனத்தில் பகுதிகள் I—III வரையும்.

தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர்கள் ரூ. 500 காசுப்பிணையும், நம்பிக்கை அல்லது உத்தரவாத முறி ரூ. 3,000 க்கும் அளிக்க வேண்டும்.

சபைகள், யாக்கங்கள் அல்லது அரசாங்க சேவைகளில் கடமை புரியும் ஊழியர்களிடமிருந்து கிடைக்கும் விண்ணப்பங்கள் முறையே அவர்களின் தலைவர்களினூடாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அவர்கள் தெரிவு செய்யப்படும் வேளையில் தாம் வேலைசெய்யும் அரசாங்க சேவை சபை, யாக்கத்திலிருந்து தாமாக முற்றாக விடுவிக்கப்படல் வேண்டும்.

ஆர். எஸ். குக்,
பொது முகாமையாளர்,
மகாவலி அபிவிருத்திச் சபை.

இல. 11, யாவத்தை வீதி,
கொழும்பு 5, 73.03.19.

3-1226—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

**ஆயுள்வேத திணைக்களம்**

வைத்திய சிறப்பறிஞர்களுக்கான பதவிகள்

ஆயுள்வேத திணைக்களத்தில் வைத்திய சிறப்பறிஞர்களுக்கான பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இதனோடு இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் செய்யப்பெற்று 1973-4-28 ஆந் திகதிக்கு முன்னர் வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும்.

| பதவி | வெற்றிடங்களுள்ள வைத்திய சாலைகள் |
|---|---|
| 1. முறிவுகளும், மூட்டு விலகல்களும் விசேட தகைமையுள்ளவர்கள். | ஆயுள்வேத மத்திய வைத்திய சாலை. ஆயுள்வேத வைத்தியசாலை, அனுராதபுரம். ஆயுள்வேத வைத்தியசாலை, இரத்தினபுரி. |
| 2. பாம்புக்கடி சிகிச்சையில் விசேட தகைமையுள்ளவர்கள். | ஆயுள்வேத வைத்தியசாலை, ஆயுள்வேத மத்திய வைத்திய சாலை, இரத்தினபுரி. |
| 3. கண்நோய் சிகிச்சையில் விசேட தகைமையுள்ளவர்கள். | ஆயுள்வேத வைத்தியசாலை, இரத்தினபுரி. ஆயுள்வேத வைத்தியசாலை, அனுராதபுரம். |

1. **முழுநேரப் பதவிகள்.**—(1) பாம்புக்கடி சிகிச்சையில் சிறப்பறிஞர். (2) சிறப்பறிஞர் முறிவுகளும் மூட்டுவிலகலும்.

**பகுதிநேரப்பதவிகள்.**—(3) கண்நோய் சிகிச்சையில் சிறப்பறிஞர்கள்.

2. **படிகள்.**—பகுதிநேரப்பதவிகளுக்கு 250 ரூபா மாதாந்த படியும், முழுநேரப் பதவிகளுக்கு 450 ரூபாவாக மாதாந்தப் படியும்.

3. **வயதெல்லை.**—(i) 35 வயதுக்கு குறையாதவராகவும் 60 வயதுக்கு கூடாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(ii) 4 (v) இல் குறிப்பிடப்பட்டுள்ளவர்களின் விடயத்தில் 30 வயதுக்குக் குறையாதவராகவும், 50 வயதுக்குக் கூடாதவராகவுமிருத்தல் வேண்டும்.

4. **தேவையான தகைமைகள்.**—(i) சிங்களத்தில் குறைந்தது 7 ம் வகுப்பு சித்தியெய்தியிருக்க வேண்டும். ஹிந்தி/சமஸ்கிருதம் அல்லது ஆங்கிலம் ஆகிய பாஷைகளில் ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்ட பாஷைகளில் அறிவு உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(ii) ஆயுள்வேத வைத்திய சபையில் உள்ள ஆயுள்வேத வைத்தியர்களுக்கான விசேட பதிவேட்டில் வியாதிகளுக்கு சிகிச்சை செய்யும் வைத்தியராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் இறுதித் திகதியிலிருந்து ஆகக் குறைந்தது 3 வருடங்கட்கு முன்னராக விண்ணப்பதாரிகள் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) மருந்துகள் தயாரிப்பதிலும் தயாரிக்கப்பட்டவைகளையும் பச்சை மருந்துகளையும் தெரிவு செய்வதில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(iv) சொந்த மருத்தவச் செய்கையில் 15 வருடங்களுக்குக் குறையாத அனுபவமிருத்தல் வேண்டும்.

(v) ஆயுள்வேத திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்படும் வைத்திய சிறப்பறிஞர்களுக்கான 2 வருடம் பயிற்சி நெறியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தவர்களாக இருத்தல் வேண்டும். மேலும் அவர்கள், அங்கீகரிக்கப்பெற்ற ஆயுள்வேதக் கல்லூரியொன்றின் டிப்ளோமா பட்டமுடையவராகவுமிருத்தல் வேண்டும்.

5. **வேலை நிபந்தனைகளும் நியதிகளும்.**—(i) இப்பதவிகள் தற்காலிகமானவை.

(ii) சேவை திருப்திகரமாகக் காணப்படின் சேவை நீடிப்பு அளிப்பதற்கு அமைய சேவைக்காலம் வழமைபோல் ஒரு வருடமாக இருக்கும்.

(iii) காரணங்களெதுவும் கொடுக்கப்படாமல் எந்த நேரத்திலும் இவரின் சேவைகள் நிறுத்தப்படலாம்.

6. **சேவை நியதிகள்.**—(i) அவசரத் தேவைகளுக்கு அழைக்கப்படுவதற்கு ஏதுவாக தெரிவு செய்யப்பெற்ற வைத்திய சிறப்பறிஞர்கள் சம்பந்தப்பட்ட வைத்தியசாலைக்கு அண்மையில் வசிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

(ii) தெரிவு செய்யப்பெற்ற அபேட்சகர் நிலையத் தலைவரினால் விதிக்கப்படும் சேவை நியதிகளுக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

(iii) இவர்கள், வைத்தியசாலையில், வெளிநோயாளர்களையும் உள் நோயாளர்களையும் கவனிப்பதோடு வைத்தியசாலையில் பயிற்சி மேற்கொள்ளும் தங்கிப் பயிலும் வைத்தியர்களையும் பயிற்றுவித்தல் வேண்டும்.

(iv) அரசாங்க விடுமுறை நாட்கள் தவிர்த்த மற்ற எல்லா நாட்களிலும் முழுநேர வைத்தியர்கள் கடமைக்குச் செல்லுதல் வேண்டும். பகுதிநேர வைத்தியர்கள், கிழமையில் 4 நாட்களுக்கு மாத்திரம் கடமைக்குச் செல்லுதல் வேண்டும்.

7. **விண்ணப்பகாரர் தங்கள் விண்ணப்பங்களோடு பின்வரும் பத்திரங்களின் பிரதிகளை இணைத்தனுப்புதல் வேண்டும் :**—(i) கல்வித் தகைமைகளின் பிரதிகளும், உயர் தொழிற்றுறை தகைமைகளின் பிரதிகளும் ஏதுவுமிருப்பின்,

(ii) குணம் பற்றியும் இப்பதவிக்குப் பொருத்தமுடைமை பற்றியும் குறிக்கும் பத்திரங்களின் பிரதிகள்.

(iii) பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதி.

8. விண்ணப்பங்களும், சாதனங்களும் ஆயுள்வேத ஆணையாளர், கொட்டா வீதி, கொழும்பு 8 என்று மூகவரிக்கு அனுப்பப்பட வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தரினதும், சொந்த மூகவரிக்கு அனுப்பப்படக்கூடாது.

அபேட்சகர் ஒருவர், தகாத உதவி பெறவோ தெரிவுசெய்வதில் செல்வாக்கை உபயோகிக்கவோ முயற்சி செய்யின் அது அவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் விளைவை உண்டுபண்ணும்.

டப்ளியு. பீ. வெவேகம,
ஆயுள்வேத ஆணையாளர்.

ஆயுள்வேத திணைக்களம்,
கொழும்பு 8,
1973.03.21.

**மாதிரிப் படிவம்**

ஆயுள்வேத திணைக்களம்

**வைத்திய சிறப்பறிஞர்களுக்கான பதவிகள்**

1. விண்ணப்பகாரரின் முழுப்பெயர் :————.
2. விண்ணப்பிக்கப்பட்ட பதவி :————.
   விருப்புருமையின் பிரகாரம் :
   (1) ————.
   (2) ————.
   (3) ————.
3. பதிவு செய்யப்பட்ட இலக்கம் :————.
4. முகவரி :————.
5. பிறந்த திகதி :————.
6. நாட்டினம் :————.
   பிறப்புரிமையினாலா அல்லது பதிவுரிமையினாலா பெறப்பட்டீர்.
7. கல்வித் தகைமைகள் :————.
8. உயர் தொழில் தகைமைகள் :————.
9. விசேட உரிமை, தகைமை ஆகியவற்றின் விபரங்கள் :————.
10. உறவினரல்லாத மூன்று பேர்களின் பெயரும் பதவிப்பெயர்களும் முகவரிகளும் :————.
   (1) ————.
   (2) ————.
   (3) ————.

————,
விண்ணப்பகாரரின் ஒப்பம்.

திகதி :————.

3-1206—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

தேசிய பாற்சபை

உள்ளகக் கணக்குப் பரிசோதகர்—தரம் III

சபையின் சேவையிலுள்ள உள்ளகக் கணக்குப் பரிசோதகர் தரம் III ன் பதவியொன்றிற்கு, ஸ்ரீ லங்காவின் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரிப் படிவத்திலேயே நிரப்பப்பட்டு 1973.4.19 அன்றோ அதற்கு முன்னரோ கீழே கையொப்பமிட்டவருக்குக் கிடைக்கும்படியாக அனுப்பப்படவேண்டும்.

2. சம்பளத்திட்டம் :

ரூபா 1,000—10 × 50—ரூபா 1,500 மாதாந்தம் (எல்லாம் உட்பட)

3. தகைமைகள் :

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தான் பின்வரும் தகுதிகள் உடையவரென அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

1. 1973.4.19 அன்று 45 வயதிற்கு மேற்படாதவர்.

2. நல்லொழுக்கமும் திடகாத்திரமும் உடையவர்.

3. (அ) பட்டய இணைச்சங்கக் கணக்காளர் அல்லது செலவு வேலைகள் கணக்காளர்

அல்லது

(ஆ) தரம் III ன் அல்லது மேற்கூறிய கணக்காளர், அரசாங்க கணக்காளர்கள் சேவையில் 10 வருடம் சேவை செய்தவராயும் அதில் 5 வருட சேவை வர்த்தகக் கணக்கு முறையிலும், இலங்கை இணைச்சங்கக் கணக்காளர் கணக்குப் பரிசோதகர்கள் சங்கத்தின் அங்கத்தவராகவும்

அல்லது

(இ) இலங்கை இணைச்சங்கக் கணக்காளர், கணக்குப் பரிசோதகர்கள் சங்கத்தின் ஒரு அங்கத்தவராக அல்லது இலங்கைப் பட்டயக் கணக்காளர்களின் இடைத்தரப் பரீட்சையில் சித்தியெய்தியவராயும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனமொன்றின் அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனமொன்றில் கணக்கியல் நிறைவேற்றுநராகக் குறைந்தது 10 வருடம் கடமையாற்றியவர்.

அல்லது

(ஈ) மேற்கூறியவற்றில் அல்லது கணக்குப் பரிசோதனை நாயகத்தின் திணைக்களத்தில் கணக்குப் பரிசோதனை தரம் II அத்தியட்சகர்கள் சேவையில் ஒரு உத்தியோகத்தவராகவும் தரம் II ல் 10 வருட அநுபவம் உடையவராகவும் அதில் 5 வருட அநுபவம் கூட்டுத்தாபனங்களின் கணக்குகள் பரிசோதனையிலும் கொண்டவராகவும் இருக்க வேண்டும்.

4. சேவை நிபந்தனைகள் :

(அ) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டவிடத்து இப்பதவியில் நியமனம் பெறுவதற்கு முன் அவர் அரசாங்கத்தில் வகிக்கும் நிலையான பதவியைத் துறத்தல் வேண்டும். அப்படியாக அரசாங்க அதிகாரத்துடன் பதவியைத் துறக்குமிடத்துச் சபையின் சேவையிற் சேரும் தருணத்தில் உபகாரச் சம்பளச் சுற்றறிக்கையின் 48அ பிரிவிலுள்ளபடி உபகாரச் சம்பள நன்மைகள் யாவற்றையும் தொடர்ந்து வைத்திருப்பர். திணைக்கள, கூட்டுத்தாபன உத்தியோகத்தரது விண்ணப்பங்கள் யாவும் 1965 ஓகத்து 20 ம் திகதி வெளிவந்த 666 ம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கைக்கிணங்கவே கவனிக்கப்படும். திணைக்கள அல்லது கூட்டுத்தாபனத் தலைவர்கள் மேற்குறிப்பிட்ட திறைசேரிச் சுற்றறிக்கைக்கு இணங்க உத்தியோகத்தர்களை விடுவிக்க முடியுமா என்பதைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

(ஆ) அபேட்சகர், அரசாங்க சேவையில் முன்னரே உறுதிப்படுத்தப்பட்டிருந்தாலன்றி, நியமனம் நியமித்த திகதியிலிருந்து மூன்று ஆண்டுகட்குத் தேர்வாய்வு முறையில் அமையும்.

(இ) விண்ணப்பதாரர்கள் 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளின் விதிகளுக்கு இணங்கவும் தற்போதிருக்கும் அல்லது இனிமேல் உருவாக்கப்படும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கவும் அரசாங்க மொழிக் கொள்கைக்கு அமைந்து நடக்கும்படி வேண்டப்படுவர்.

(ஈ) தேர்வாய்வுக்குரிய கால எல்லை முடிந்தபின் உறுதிப்படுத்துவது பிறவற்றுள் அரசகரும மொழித் தேவைகளுக்கு இணங்குவதைப் பொறுத்திருக்கும்.

5. ஒப்பந்த நிபந்தனைகள் :

இப்பதவி நிரந்தரமானது. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் சகாய நிதி நன்மைகட்குத் தகுதியுடையவர்.

6. பிணை :

தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் 7,500 ரூபா பணமாக அல்லது முறியாக பிணை செலுத்துமாறு வேண்டப்படுவர்.

7. மருத்துவச் சோதனை :

சபையின் மருத்துவ உத்தியோகத்தரால் நடத்தப்படும் மருத்துவ சோதனையில் நியமனம் பெறுவர் சித்தியெய்துதல் வேண்டும்.

8. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் கீழ்க்குறிப்பிட்ட சான்றிதழ்களின் பிரதிகளை (மூலங்கள் அல்ல) இணைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (பி.கு. சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்காகிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பெறப்பட்ட மிகக் கூடிய கல்வித் தகைமை, உயர்தொழிலுக்குரிய தகைமைச் சான்றிதழ்கள்.

(இ) குணவியல்புச் சான்றிதழ்கள் இரண்டு ; இவற்றுள் ஒன்று கல்விப் பணிப்பாளர், கல்லூரிப் போதனாசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) முன்னர் வேலை வழங்கியவர்களிடமிருந்து அங்கு செய்த கடமைகளின் தன்மையைக் காட்டும் சான்றிதழ்.

9. விண்ணப்பங்கள் அல்லது அவை சம்பந்தமான கடிதத் தொடர்புகள் யாவும் தலைவர், பாற்சபை, த. பெ. எண் 1155, கொழும்பு 5, என்ற விலாசத்திற்கன்றி சபையின் சேவையிலுள்ள வேறெந்த உத்தியோகத்தருக்கோ தனிப்பட்ட முறையில் அனுப்பக்கூடாது.

தலைவர்,
பாற் சபை.

பாற்சபைத் தலைமைக் காரியாலயம்,
த. பெ. எண் 1155,
கொழும்பு 5,
7 மார்ச் 1973.

விண்ணப்பப் படிவம்

உள்ளகக் கணக்குப் பரிசோதகர் பதவி—தரம் III

1. முழுப் பெயர் :————.

2. தனிப்பட்ட முகவரி :————.

3. விண்ணப்பதாரரின் பிறந்த திகதியும் இடமும் :————. (பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்).

4. விண்ணப்பதாரரின் தந்தையின் பிறந்த இடம் :————.

5. கல்வித் தகைமைகள் :————. (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்).

6. உயர் தொழில் தகைமைகள் :————. (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்).

7. சிங்களம்/தமிழ் ஆகியவற்றில் அறிவு :————.

8. முன் அநுபவ விபரங்கள் :————. (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்).
வேலை செய்த நிறுவனத்தின் பெயர் :—
பதவி — சேவைக்காலம் தொடக்கம் முடிவு

9. தற்போதைய உத்தியோக விபரங்கள் :————.
பதவி — சேவைக்காலம் தொடக்கம் முடிவு

10. விண்ணப்பதாரரின் குணம் பற்றிச் சான்று பகிரக்கூடிய இருவரின் பெயர்கள் :————.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

3-1213—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

இல. 1/83/31 (ஜி)

**அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவையிலுள்ள (கீழ்த்தரம்) சுருக்கெழுத்தாளருக்கான (மாநாட்டுத் தேர்வு—ஆங்கிலம்) வினைத்திறமை காண் தடைத் தேர்வு 1972**

அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த் தரத்திலுள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள சுருக்கெழுத்தாளர்கள், அவர்களது பெயர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் நடாத்தப்பட்ட இரண்டாம் வினைத்திறமைகாண் தடைத் தேர்வு சம்பந்தமான மாநாட்டுத் தேர்வில் (ஆங்கிலம்) சித்தியெய்தியுள்ளார்களென இத்தாலறிவிக்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு 5,736 ரூபாவுக்கு முன்னுள்ள வினைத்திறமைகாண் தடைக்கு மேலாகப் பதவியுயர்த்தப்படுவதற்காக விதிக்கப்பட்டுள்ள பரீட்சையை அவர்கள் இப்பொழுது பூர்த்திசெய்துள்ளனர்.

| பெயர் | திணைக்களம் | தேர்வு நடாத்தப்பட்ட தேதி |
|---|---|---|
| செல்வி பி. ஹாடிங் .. | அளவையாளர் அதிபதி | 1.6.1972 |
| திருமதி ஜீ. எஸ். த சில்வா, .. | அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உண்ணாட்டலுவல்கள் அமைச்சு | ஷை |
| திரு. எம். எச். ஜே. பொன்னுந்து .. | தொழில் .. | ஷை |
| திருமதி ஆர். கருணதிலக .. | கல்வி அமைச்சு .. | ஷை |

| பெயர் | திணைக்களம் | தேர்வு நடத்தப்பட்ட தேதி |
|---|---|---|
| கே. பி. பொன்னுந்து .. | கணக்காய்வு .. | 9.6.1972 |
| திரு. ரி. கே. பீ. குணவர்தன .. | மஜிஸ்ரேட் நீதிமன்றம், மாத்தறை | ஷை |
| திருமதி எம். சி. பொன்னுந்து .. | இறக்குமதி ஏற்றுமதி | ஷை |
| திரு. வ. டபிள்யூ. வெற்றசிங்க .. | தரைப்படைத் தலைமையகம் | ஷை |
| திரு. ஈ. டபிள்யூ. பீ. குருகே .. | அவிசாவளை மாவட்ட நீதிமன்றம் | ஷை |
| செல்வி எம். ஆர். பி. பொன்னுந்து .. | மதிப்பு .. | ஷை |

ஆர். எம். பி. சேனநாயக்க,
அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதிக்காக.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
இணைந்த சேவைகள் பகுதி,
றொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7,
1973 ம் ஆண்டு மாச் மீ 19 ந் உ.

3–1187—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

இல :1/83/32(ஜி)

**அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த்தர உத்தியோகத்தர்களுக்கு I, II ஆம் வினைத்திறமைகாண் பரீட்சைகள் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்)—1973, மே மாதம்**

1972 மே மாதம் 19 ஆந் தேதியின் இல. 15,011 கொண்ட அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவையின் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ளதான, அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதியின் கட்டுப்பாட்டின் கீழுள்ள அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த்தர உத்தியோகத்தர்களின் I ஆம், II ஆம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகள் 1973, மே மாதம் 19 ஆந் தே தொடக்கம் கொழும்பில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. இப்பரீட்சைகளைப் பரீட்சை ஆணையாளர் நடாத்துவார். இப்பரீட்சைகளை நடாத்துவதற்காக அவரால் விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவராவர். இவ்வறிவித்தலின் முடிவில் பரீட்சார்த்திகளுக்குரிய விதிகளும் பிரமாணங்களும் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளன.

3. இவ்வறிவித்தலின் முடிவில் இப்பரீட்சைக்குரிய மாதிரி விண்ணப்பப் படிவம் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் தமது சொந்த விண்ணப்பங்களை மாதிரிப் படிவத்துக்கிணங்க முழுத்தாளொன்றின் அரைத்தாளில் (வேறு எந்த அளவுப் பத்திரத்திலுமன்றி) தயாரித்தல் வேண்டும். இதன் பொருட்டு ஒரு தாள் மட்டும் உபயோகிக்கப்படல் வேண்டும். படிவம் தட்டெழுத்தில் தயாரிக்கப்படலாம்; ஆனால் அது செம்மையாகவும் தெளிவாகவும் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தில் நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள், சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் மூலம் பதிவு அஞ்சலில் மலாய் வீதி, கொழும்பு 2, என்னும் முகவரியிலுள்ள பரீட்சை ஆணையாளரை 1973, ஏப்ரல் மாதம் 10 ஆந் தேதியன்றோ அதற்கு முன்னரோ சென்றடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பும் விண்ணப்பத்தைக் கொண்டுள்ள உறையின் மேற்பக்க இடது மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்படல் வேண்டும். முடிவுத் தேதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பம் எதுவும் நிராகரிக்கப்படும்.

அரசகரும மொழிக் கொள்கை நோக்கத்திற்காகப் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அரசகரும மொழியில் தமது விண்ணப்பங்களைத் தயாரித்து அம்மொழியிலேயே அவற்றை நிரப்புதல் வேண்டும். எனினும் முன்னர் சேர்ந்த உத்தியோகத்தர் அரசகரும மொழியிலோ அல்லது தமிழிலோ/ஆங்கிலத்திலோ எது அவர்களின் ஆட்சேர்ப்பு மொழியோ அதில் தமது விண்ணப்பங்களைத் தயாரித்து நிரப்பும் விருப்புரிமை உடையவராவர்.

4. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள எல்லாப் பரீட்சார்த்திகட்கும் பரீட்சை ஆணையாளர் அனுமதி அட்டைகளை நேர அட்டவணைப் பிரதியொன்றுடன் கொடுப்பார். பரீட்சைத் தேதிக்கு ஏழு நாட்களுக்கு முன்னரேனும் அனுமதி அட்டையை ஒரு பரீட்சார்த்தி பெறுவிடின், அவர் காலந் தாழ்த்தாது மலாய் வீதி, கொம்பனித் தெரு, த. பெ. 1503 என்னும் முகவரியிலுள்ள பரீட்சை ஆணையாளருடன் தொடர்பு கொண்டு அனுமதி அட்டையைப் பெறவில்லையென அறிவித்துப் பின்வரும் தகவலையும் கொடுத்தல் வேண்டும் :—

(1) பரீட்சையின் பெயர் ;

(2) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;

(3) முழு அஞ்சல் முகவரி ;

(4) அஞ்சல் அலுவலகம், பதிவு இல. அனுப்பிய தேதி.

5. **ஆளடையாள அட்டைகள்**.—பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாங்கள் எடுக்கும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளரின் திருப்திக்கமைய தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டப்படுவர். இந்நோக்கத்திற்காகப் பின்வரும் சாதனங்களிலொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :—

(அ) அஞ்சல் அதிபதியினால் வழங்கப்படும் ஆளடையாள அட்டையொன்று ;

(ஆ) பரீட்சை தொடங்கும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு முற்படாமல் வழங்கப்பட்ட செல்லுபடியான கடவுச்சீட்டொன்று ;

(இ) பரீட்சை தொடங்குவதற்கு முன்னர் மூன்று ஆண்டுகளுக்கு முற்படாமல் அரசாங்க அதிகாரத்துடன் வழங்கப்பட்ட பரீட்சார்த்தியின் ஒளிப்படம் தாங்கிய சாதனம் அல்லது உத்தரவுச் சீட்டு அல்லது சான்றிதழ் ஏதாவதும் ;

(ஈ) கடவுச்சீட்டு பருமனுடைய ஒளிப்படமொன்று (ஒளிப்படத்தின் மறுபக்கத்தில் திணைக்களத்தின் தலைவர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் முன் பரீட்சார்த்தி கையொப்பமிட்டு, இக்கையொப்பமும் ஒளிப்படமும் சரியானதென அவ்வுத்தியோகத்தர் சான்றளித்தல் வேண்டும். சான்றளிப்பவரின் பெயர், பதவி, திகதி, முகவரி ஆகியன தெளிவாகத் தெரிவித்தல் வேண்டும். மேற்பார்வையாளர் இவ்வொளிப்படத்தை வைத்திருப்பார்).

6. பின்வரும் அடிப்படையில் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து கட்டணங்கள் அறவிட முடிவு செய்யப்பட்டுள்ளது :—

(அ) முதல் அமர்வு கட்டணமில்லை.

(ஆ) தொடர்ந்த ஒவ்வோர் அமர்வுக்கும்—முழுப் பரீட்சை ரூபா 15 ; ஒரு பாடம் ரூபா 7.50.

கட்டணங்கள் பரீட்சார்த்திகளினால் அவர்களது கையொப்பமிடப்பட்டு முறையாகப் பெறுமதி நீக்கம் செய்யப்பட்ட அரசிறை முத்திரைகளால் கட்டப்படவேண்டும்.

ஆர். எம். பீ. சேனநாயக்க,
அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதிக்காக.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
கொழும்பு 7,
1973 ம் ஆண்டு மார்ச் மீ 19 ந் உ.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த்தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கான I ஆம், II ஆம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளுக்கு (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) அனுமதிக்கப்படுதற்கான விண்ணப்பம்—1973, மே மாதம்**

| |
|---|
| சுட்டிலக்கம் :<br>அலுவலக உபயோகத்திற்கு மட்டும். |

1. விண்ணப்பகாரரின் குடும்பப் பெயர், முதலெழுத்துக்களுடன் (திரு./திருவாட்டி/செல்வி) :————.
(பெரிய எழுத்துக்களில்)

2. முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்பட்ட பெயர்கள் :————.
(பெரிய எழுத்துக்களில்)

3. அலுவலகத்தின் அல்லது திணைக்களத்தின் பெயரும் அலுவலக முகவரியும் :————.

4. அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவையில் சேர்ந்த தேதி :————.

5. அரசகரும மொழிக் கொள்கை நோக்கத்திற்காக நீர் முன்னர் சேர்ந்தவரா அல்லது புதிதாகச் சேர்ந்தவரா? :————.

6. முன்னர் நடந்த பரீட்சை எதனிலும் சுருக்கெழுத்து, தட்டெழுத்து, சிங்களம்/தமிழ் ஆகிய பாடங்களில் சித்தியடைந்துள்ளீரா? அவ்வாறாயின் பரீட்சைத் தேதியைக் கூறுக :————.

7. 1964 செத்தெம்பர் மாதம் 9 ஆந் தேதிய இல. (ஜி) 31 கொண்ட திறைசேரியின் சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சிங்களப் பாடத்தினின்றும் உமக்கு விலக்களிக்கப்பட்டிருந்தால், அத்தகைய விலக்கினையளிக்கும் கடிதத்தினைத் தொடர்பு காட்டுக :————.

8. எந்த வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைக்கு (I அல்லது II) தோற்ற நீர் தகவுடையவரென்பதையும், பரீட்சைக்குரிய பாடங்கள், அவற்றின் மொழி என்பனவற்றையும் கூறுக :————.

9. இத்தடவை நீர் தோற்றுவதற்குத் தகவுடைய வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைக்கு (I அல்லது II) முன்னர் தோற்றியுள்ளீரா? அவ்வாறாயின் எப்பொழுது? :————

10. மேலே பந்தி 9 இல் குறிப்பிடப்பட்டுள்ள வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கு நான் முன்னர் தோற்றியுள்ளேன். இவ்விண்ணப்பப்பத்திரத்தில் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் என்னால் பெறுமதி நீக்கம் செய்யப்படுமுன்னர் உபயோகிக்கப்படாதவையாகவும் பெறுமதியுடையனவாகவுமிருந்தன என உறுதிப்படுத்துகிறேன்.

| |
|---|
| முத்திரைக்கான கூடு |

பரீட்சார்த்தியின் கையொப்பம்.
————,

திகதி :————.
பரீட்சை ஆணையாளர்,

அனுப்பப்படுகிறது.

(அ) இதனுள் விபரங்கள் தரப்பட்டுள்ள பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றத் தகவுடையவர்;

*(ஆ) இப்பரீட்சார்த்தி முன்னர் இப்பரீட்சைக்குத் தோற்றியவரல்லர்;

*(இ) இப்பரீட்சார்த்தி முத்திரைகளை ஒட்டி முறையாகப் பெறுமதி நீக்கம் செய்திருக்கிறார்.

*(பொருந்தாதவற்றை நீக்கிவிடுக)

திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவிப் பெயரும்.

திகதி :————.

**பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்**

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :—

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவிய காலம் வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தைபற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்து விடல்.

பரீட்சைக்கு முன்னரோ பரீட்சை நடக்கும் பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சாதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

**விதிகள்**

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாருக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர்தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர்; செய்கைமுறை அல்லது வாய் மொழிப் பரீட்சையைப் பொறுத்த வரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக் கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப்புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பல விடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாருக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிலிருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அழகிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப் பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப் பெட்டியையோ கணிதக் கருவிப் பெட்டியையோ விட கைப்பை அழகுசெய் செப்பு, பார்சல் முதலியவற்றை, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில், மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டு வரும்பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ, புத்தகத்திலிருந்தோ, கடதாசிகளிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக் கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேருெரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக் கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேருெரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்படவேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேருெருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிபடுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகளுக்கு**

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்:—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்கு தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதியைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்கு முன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ளவேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்கு தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீசார்த்தியென நிருபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்திற்குத் தோற்றும்பொழுது இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டுவருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனரேகைத் தாள், பேரேட்டுத் தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாருக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால். அதைப்புற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும். சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில் அழிறப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர் வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(v) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்கு மிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்படவேண்டும். முழுவிடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்ருேடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vi) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில், வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலது பக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவருன இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(vii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப்படங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும், பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டுருபத்தை அல்லது சிறு படத்தை காட்டி எழுதப்படும் விடை, விடைத் தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமாளுல் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(viii) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல்மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(ix) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள், தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(x) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xi) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெற வேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்ட வேண்டும்.

போகொட பிரேமரத்தின,
பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி,
கொழும்பு-2.

*3-1178—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53*

---

சுற்றறிக்கை எண் : 25

தரவு நிரைப் படுத்தும் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
கொழும்பு 2,
1973.02.15.

எல்லாப் பாடசாலைகளின் தலைமை ஆசிரியர்கட்கும்
தனிப்பட்ட பரீட்சார்த்திகட்கும்.

**கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரணதர) ப் பரீட்சை—1973**

மேற்படி பரீட்சையின் பொருட்டுத் தயாரிக்கப்படவுள்ள மாதிரி நேர அட்டவணையானது இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. இப் பரீட்சைப் பிரமாணங்களின்படி, கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறே ஒவ்வொரு பாடத் தொகுதியிலிருந்தும் பரீட்சார்த்தி ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களுக்கு ஒரே நேரத்தில் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

1. தூயகணிதம்/கணிதம் (திருத்திய பாடத்திட்டம் 1970)/எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம்.
2. பௌத்த சமயம்/கிறீஸ்து சமயம் (றோ. க.)/கிறீஸ்து சமயம் (றோ. க. அல்லாத)/இஸ்லாம்/இந்து சமயம்.
3. சங்கீதம் மேல்நாட்டு/சங்கீதம் ஹிந்துஸ்தானி/சங்கீதம் கருநாடகம்.
4. மரவேலை/நெசவுத் தொழில்/வனைதற்றொழில்/உலோக வேலை.
5. சிங்களப் பாஷை/சிங்களப் பாஷை (விருப்பத்திற்குரியது)
6. தமிழ்ப் பாஷை/தமிழ்ப் பாஷை (விருப்பத்திற்குரியது)
7. பாளி/அரபு/ஹிந்தி/மலாய்/மலையாளம்/மாலைதீவு/உருது/கிரேக்கம்/பிரெஞ்சு/ஜேர்மன்.
8. சுகாதாரவியல்/பிரயோக கணிதம்.
9. மனையியல்/கேத்திரகணிதமுறை வரைதலும் பொறிமுறை வரைதலும்.
10. தையல் வேலை/உயர் கணிதம்/கணக்கியல்.
11. இரசாயனம்/வர்த்தகம்.
12. சம்ஸ்கிருதம்/இலத்தீன்/சுருக்கெழுத்து–தட்டச்சு.
13. சுருக்கெழுத்து–தட்டச்சு சிங்களம்/சுருக்கெழுத்து–தட்டச்சு தமிழ்/சுருக்கெழுத்து–தட்டச்சு ஆங்கிலம். (சுருக்கெழுத்துப் பாடத்திற்குத் தோற்றும் மொழிமூலமே தட்டச்சுப் பரீட்சைக்கும் தோற்றுதல் வேண்டும்).

மேலே கொடுக்கப்பட்டுள்ள பிரமாணங்களுக்குமாறாக நேர அட்டவணையில் ஒரே நேரத்தில் நடைபெறவிருக்கும் பாடங்கள் இரண்டிற்குத் தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகள் இருப்பின் அவர்களுக்கு விசேட ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். தினமும் மூன்று தொகுதிகளாக சிங்கள தட்டச்சுப் பரீட்சை மூன்று நாட்களிலும் தமிழ், ஆங்கில தட்டச்சுப் பரீட்சைகள் இரண்டு நாட்களிலும் நடைபெறும்.

**1973 ம் ஆண்டு தொடக்கம்** பாடசாலைப் பரீட்சார்த்திகள் ஒவ்வொருவருக்கும் நேர அட்டவணையின் பிரதிகள் தனித்தனி வழங்கப்படமாட்டாது. ஆகையினால் இந் நேர அட்டவணையை பாடசாலைப் பரீட்சார்த்திகள் அறிந்து கொள்வதன் பொருட்டு பிரசித்தமான இடத்தில் அவற்றை வைத்திருத்தல் பாடசாலைத் தலைவரின் பொறுப்பாகும்.

எனினும் பிரவேசச் சீட்டுடன் நேர அட்டவணையின் சில பிரதிகள் அனுப்பிவைக்கப்படும். ஆகையினால் தேவையான விபரங்களைக் குறித்துக் கொள்ளும் வண்ணம் உமது பரீட்சார்த்திகளுக்கு எடுத்துக்கூறவும். இவ்விடயம் சம்பந்தமாக மேலும் விபரங்கள் தேவைப்படின் பரீட்சை அத்தியட்சகர், தரவுக் கிளை, பரீட்சைத் திணைக்களம், மலே வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.

போகொட பிரேமரத்ன,
பரீட்சை ஆணையாளர்.

நேர அட்டவணை

| 1973 | முற்பகல் | | பிற்பகல் | |
|---|---|---|---|---|
| டிசெம்பர் 11 செவ்வாய் | விவசாயம் பயிற் செய்கை I<br>விவசாயம் பயிற் செய்கை II<br>சமஸ்கிருதம், இலத்தீன், கிரேக்க உரோம நாகரீகம், ஆங்கில இலக்கியம் | 9.00— 9.30<br>9.30—12.00<br>9.00—12.00 | கைவினை | 1.00—4.00 |
| டிசெம்பர் 12 புதன் | சிங்களப் பாஷை<br>சிங்களப் பாஷை (விருப்பத்திற்குரியது)<br>சுருக்கெழுத்து (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) | 9.00—11.40<br>12.00—12.45 | சிங்கள இலக்கியம்<br>தமிழ் இலக்கியம் " அ "<br>தமிழ் இலக்கியம் " ஆ " | 1.30—4.30 |
| டிசெம்பர் 13 வியாழன் | சுகாதாரவியல் I<br>சுகாதாரவியல் II<br>பிரயோக கணிதம்<br>தட்டச்சு | 9.00—10.00<br>10.00—12.00<br>9.00—12.00<br>9.00—11.30 | குடியியல் | 1.00—4.00 |
| டிசெம்பர் 14 வெள்ளி | தூய கணிதம் I<br>கணிதம் I (திருத்திய பாடத்திட்டம் 1970) | 9.00—12.00 | தூயகணிதம் II<br>கணிதம் II (திருத்திய பாடத்திட்டம்—1970)<br>எண்ணிதம்<br>வர்த்தக எண்கணிதம் | 1.30—4.30<br>1.30—3.00<br>1.30—4.00 |
| டிசெம்பர் 15 சனி | கணக்கியல்<br>சங்கீதம், (ஹிந்துஸ்தானி, கருநாடகம், மேல்நாட்டு) | 9.00—12.00 | ஆங்கிலப் பாஷை | 1.00—4.00 |
| டிசெம்பர் 17 திங்கள் | உயிரியல் I<br>உயிரியல் II<br>பொருளியல் | 9.00— 9.45<br>10.00—12.00<br>9.00—12.00 | மனையியல்<br>கேத்திர கணிதவரை, பொ. மு. வரை | 1.00—4.00 |
| டிசெம்பர் 18 செவ்வாய் | இரசாயனம் I<br>இரசாயனம் II<br>வர்த்தகம்<br>தையல்வேலை I | 9.00— 9.45<br>10.00—12.00<br>9.00—12.00<br>9.00—12.00 | புவியியல் I<br>புவியியல் II | 12.45—2.45<br>3.00—5.00 |
| டிசெம்பர் 19 புதன் | பௌதிகவியல் I<br>பௌதிகவியல் II<br>தையல்வேலை II | 9.00— 9.45<br>10.00—12.00<br>9.00—12.00 | பௌத்த சமயம்<br>இந்துசமயம்<br>இஸ்லாம்<br>கிறீஸ்துசமயம் (றோ. க.)<br>கிறீஸ்துசமயம் (றோ. க. அல்லாத) | 1.00—4.00 |
| டிசெம்பர் 20 வியாழன் | சரித்திரம்<br>பாளி, ஹிந்தி, அரபு, ஜேர்மன், பிரெஞ்சு, மாலைதீவு, மலையாளம், மலாய், உருது, கிரேக்கம் | 9.00—12.00 | தமிழ்ப் பாஷை<br>தமிழ்ப் பாஷை (விருப்பத்திற்குரியது) | 1.00—3.40 |
| டிசெம்பர் 21 வெள்ளி | சித்திரம் II<br>உயர்கணிதம் I | 9.00—12.00<br>9.00—11.30 | சித்திரம் I<br>உயர் கணிதம் II | 1.30—4.30<br>1.30—4.00 |

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| **மாச்சு** .. | 2.3.73 | வெள்ளி .. | 21. 2.73 | புதன் .. | ந. ப. | 12.00 |
| | 9.3.73 | வெள்ளி .. | 28. 2.73 | புதன் .. | ந. ப. | 12.00 |
| | 16.3.73 | வெள்ளி .. | 7. 3.73 | புதன் .. | ந. ப. | 12.00 |
| | 23.3.73 | வெள்ளி .. | 14. 3.73 | புதன் .. | ந. ப. | 12.00 |
| | 30.3.73 | வெள்ளி .. | 21. 3.73 | புதன் .. | ந. ப. | 12.00 |
| **ஏப்பிறல்** .. | 6.4.73 | வெள்ளி .. | 28. 3.73 | புதன் .. | ந. ப. | 12.00 |
| | 11.4.73 | புதன் .. | 4. 4.73 | புதன் .. | ந. ப. | 12.00 |
| | 19.4.73 | வியாழன் .. | 11. 4.73 | புதன் .. | ந. ப. | 12.00 |
| | 27.4.73 | வெள்ளி .. | 18. 4.73 | புதன் .. | ந. ப. | 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண் டிசம்பர் மீ 29 ந் உ.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.